தரத்தினில் சிறந்த
மான் - முயல்
வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ
புலிமார்க் ஓடுகளே
பாவியுங்கள்
மு. தா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu — 50 சதம்

மலர் 22 · கார்த்திகை 7 · ...ம் 13 · இதழ் 283 · ..-11-80
யாழ்ப்பாணம் · சனிக்கிழமை

...SITY OF SRI LANKA ... CAMPUS
RECEIVED
19..-11-2..
PERIODICALS DIVISION
LIBRARY

## றீகன்—ஸ்மித் சந்திப்பு

வாஷிங்டன் நவ. 21
புதிய அமெரிக்க ஜனாதிபதியாக ஜனவரி மாதம் 20ம் திகதி பதவியேற்கவுள்ள திரு. றொனல்ட் றீகன் மேற்கு ஜெர்மன் திபர் திரு. ஸ்மித்தை சந்தித்தார். ... ...

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டிய பின்னர் திரு. றீகன் சந்திக்கும் முதலாவது வெளிநாட்டுத் தூதவர் திரு. ஸ்மித் என்பது குறிப்பிடத்தக்கது. (வெ)

### இழந்த எமது உரிமைகளை வென்றெடுக்க

# வடபகுதி மக்கள் எனக்கு பூரண ஆதரவளிக்கவேண்டும்

## சுன்னாகம் கூட்டத்தில் சிறிமா கோரிக்கை

— நமது நிருபர் சு. தர்மசிங்கம் —
(யாழ்ப்பாணம்)

'பொய்யான வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்து ஆட்சிக்கு வந்த இன்றைய அரசு அவற்றை நிறைவேற்றமுடியாத நிலையில் மக்களின் எண்ணத்தைத் திசைதிருப்புவதற்காகவே எனது குடியியல் உரிமைகளையும் பாராளுமன்ற உறுப்புரிமையையும் பறித்துள்ளது.

'இழந்த உரிமைகளை நான் மீண்டும் பெறுவதற்கு வடபகுதி மக்களும் எனக்குப் பூரண ஆதரவளிக்கவேண்டும்.'

இவ்வாறு யாழ். வந்துள்ள முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று மாலை சுன்னாகத்தில் நடைபெற்ற விவசாயிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

சுன்னாகம் விவசாயிகள் ஏற்

(8-ம் பக்கம் பார்க்க)

## அமைதியாக நடந்த பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)
அறவழிப் போராட்டக் குழுவினரால் சாதி ஒழிப்பு, சீதனக் கொடுமை, ஆகியவற்றுக்கு எதிராகவும், சமத்துவ வழிபாடு, சமூக ஒற்றுமை ஆகியவற்றை வலியுறுத்துமுகமாகவும் நடத்தப்பட்ட பிரார்த்தனை ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை யாழ். நகரிலுள்ள தந்தை செல்வா நினைவாலய முன்றலில் அமைதியாக இடம்பெற்றது.

காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்ற இப்பிரார்த்தனையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், யாழ்ப்பாணம் எம். பி. திரு. வி. யோகேஸ்வரன், உடுப்பிட்டி எம். பி. திரு. ரி. இராஜலிங்கம், யாழ். மாநகர முதல்வர்

(8ம் பக்கம் பார்க்க)

## குறைநிரப்பு நிதி

(கொழும்பு)
'பட்ஜட்'டுக்குப் புறம்பாக அரசாங்கம் இவ்வாண்டு 51 குறைப்புப் பிரேரணைகளை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியிருக்கிறது.

புதிய வரவு-செலவுத்திட்டத்திற்குப் புறம்பாக 6 குறைநிரப்புப் பிரேரணைகள் நேற்று முன்தினம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

## சிறிமாவுக்கு பலாலியில் சிறப்பான வரவேற்பு

(பலாலி)
யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள முன்னாள் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு நேற்று மாலை பலாலி விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமானநிலையத்தில் சுதந்திரக் கட்சியின் வடபகுதி அமைப்பாளர்களான திருவாளர்கள் பி. முருகையா, கு. விநோதன், பி. கதிரவேலு, நவநீதன், முன்னாள் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. தியாகராசா, திரு. வி. இராஜசுந்தரம், எஸ். பேரின்பநாயகம், ஜனாப். பஷீர் உட்பட பல சுதந்திரக் கட்சிப் பிரமுகர்கள் திருமதி பண்டாரநாயக்காவை வரவேற்றனர்.

விமான நிலையத்துக்கு வெளியே பெருந்திரளான மக்கள் கூடியிருந்தபோதிலும் குறிப்பிட்ட சிலரைத்தவிர வேறெவரும் விமானநிலைய வளவினுள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

சரியாக 6-33 மணிக்கு பலாலி வந்தடைந்த திருமதி பண்டாரநாயக்கா விமான நிலையத்திலிருந்து சுன்னாகத்திற்கு காரில் அழைத்துச் செல்லப்பட்டார்.

இவர் சென்ற காருக்குப் பின்னால் ஒரு சில கார்களும் மட்டுமே பொலிசார் செல்ல அனுமதித்தனர். விமானநிலையத்தில் காத்திருந்த ஏனைய கார்கள் வேறு வழியால் திருப்பி அனுப்பப்பட்டனவாம்.

விமானநிலைய வளவினுள் பத்திரிகை நிருபர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

சுன்னாகம் செல்லும் வழியில் சில இடங்களில் கார் மறிக்கப்பட்டு திருமதி பண்டாரநாயக்காவுக்கு மாலை அணிவிக்கப்பட்டது. (இ)

# அரசுக்கு எதிரான 5 கட்சிக் கூட்டம்

## சிறிமா, அமிர், சண், கொல்வின் யாழ் நகரில் இன்று ஒரே மேடையில்!

(யாழ்ப்பாணம்)
ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும் விலைவாசி உயர்வையும் கண்டித்து யாழ்ப்பாணத்தில் ஐந்து கட்சிகள் ஏற்பாடு செய்துள்ள இன்றைய கூட்டத்தில் முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா உரையாற்றுவார்.



யாழ். திறந்தவெளியரங்கில் இன்று மாலை தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. மாவை சேனாதிராசா, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. என். சண்முகதாசன், ஜனாப் எம். ஏ. சி. இக்பால், லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா, திரு எம். வி. நடராசா, மக்கள் ஐக்கிய முன்னணித்தலைவர் திரு. டினேஸ் குணவர்த்தன, சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. கு. விநோதன் ஆகியோர் உரையாற்றுவர்.

கூட்ட முடிவில் விசேட பஸ் சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)



## துரையப்பா சிலைக்கு அஞ்சலி செலுத்த சிறிமாவுக்கு அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் வந்துள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டா நாயக்காவுக்கு யாழ். மாநகர சபை வளவினுள் உள்ள முன்னாள் மேயர் திரு. அ. பி. ரட் துரையப்பாவின் சிலைக்கும், சமாதிக்கும் அஞ்சலி செலுத்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

திருமதி பண்டாரநாயக்கா; அமரர் துரையப்பாவின் சிலைக்கும், சமாதிக்கும் அஞ்சலி செய்ய அனுமதி கேட்கப்பட்டதாகவும் மறுப்புத் தெரிவிக்கப்பட்டதாகவும் யாழ். மாநகர ... இராஜா விசுவநாதன் தெரிவித்தார்.

திருமதி பண்டாரநாயக்கா தமது யாழ். விஜயத்தின் போது சுதந்திரக் கட்சிப் பிரமுகரும் முன்னாள் மேயருமான துரையப்பா ... மாநகர சபையிடம் அனுமதி கோரியிருந்தார் என்றும் இதற்கு யாழ். மாநகரசபை அனுமதி மறுத்துள்ளதாகவும் திரு. விசுவநாதன் தெரிவித்தார்.

ஐந்து கட்சிகளும் ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தில் கலந்துகொள்ள வரும் திருமதி சிறிமா, தமது கட்சிக்கு ஆதரவு தேடுமுகமாக நடாத்த விரும்பும் வைபவங்களுக்கு கூட்டணியும் ஆதரவு வழங்குவது தவறு என்று கூட்டணியின் உயர் வட்டாரங்கள் கருதுவதாலேயே இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

எமது ஸ்தாபனத்தின் மாட்டுத்தொழுவத்தில் எருக்குவியல் விற்பனைக்குண்டு விலையைப் பார்வையிட்டு தாமணித்துச் சொள்ளலாம். ஸ்ரீ தாமோதர விலாஸ், 239, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 7065
(7357)

...ர்பண்ணை, பிரப்பங்குளம் வீதியில் ... கள் சிறு காணித்துண்டுடன் கூடிய நிலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி: 39, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
7393

2 ஸ்ரீ தொடர் இலக்க வோக்ஸ்வகன் காரும், இத்தாலியன் மொடல் 5 ஸ்ரீ தொடர் இலக்க லம்பறட்டா ஸ்கூட்டரும் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: சாந்தி மில், வட்டுக்கோட்டை.
7404

3 ஸ்ரீ தொடக்கம் 11 ஸ்ரீ வரையுள்ள மொறிஸ் ஒக்ஸ்போட், மொறிஸ் மைனர் வோக்ஸ்வகன் கார்கள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு வாகனம் மாற்றவும், பிணைஸ் வசதிகளும் செய்து கொடுக்கப்படும். பார்வையிடும் நாட்கள் சனி, ஞாயிறு: விபரங்களுக்கு: 81/2, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோவிலடி) யாழ்ப்பாணம். (7406)

## தேவை

அனுபவமுள்ள பைண்டர் தேவை. ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். ஸ்ரீ ஆத்ம ஜோதி அச்சகம், நாவலப்பிட்டி. 7395

ஜப்பானில் முற்றாக மறுசீரமைக்கப்பட்டு உன்னதநிலையில் இறக்குமதிசெய்யப்பட்ட 'இசூசு' டீசல் ட்றக் (Isuzu. Elf-TLD 64/1976/77-Model 250 Double Rear Whee Diesel Truck ,மிற்சுபிசி Mitsubishi 4 DR 50 A Diesel Engine 4 Cylinder),டொயோட்ட (Toyota 2 J 4 Cylinder Diesel Engine) - டொயோட்டா (Hiace) வானை டீசல் வாகனமாக மாற்றுவதற்கு ஏற்றது ஆகியவை உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். சாந்தி ரயர் வேக்ஸ், முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 80 5. (7392)

## பதவி வெற்றிடம்

பனம் சீனி, வெல்லம் உற்பத்தி நிலையங்கட்கான முகாமையாளர் பதவி வெற்றிடங்கட்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விபரங்கட்கு 'கற்பகம்' பத்திரிகையினைப் பார்க்கவும். சகல தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கங்களிலும், சமாச காரியாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி 30-11-80.

செயலாளர்,
தெ. ப. பொ.
கூ. சமாசம்,
330, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்
7408

# இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 7-ந் திகதி
சனிக்கிழமை
(22-11-80)

மேடம்: அதிக சிந்தனை தலையிடியைக் கொடுக்கும், உடல்நலம் பாதிக்கப்படலாம், வீணைபொருள்களினுல் பணம் விரயமாகும், அதிக கட்டுப்பாடு அவசியம் தேவை.

இடபம்: அரசியல் வாதிகளுக்கு இன்று அடிசறுக்கலாம். நான் என்ற அகம்பாவத்தை அடக்கிக்கொள்ளவும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வெற்றிக்கு வழிஅமைக்கும்.

மிதுனம்: சொற்சிலம்பம் ஆடுவதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள், சொகுசான வாழ்வும் கிடைக்கும். பிறருடைய மதிப்புக்கும் இலக்காவீர்கள்.

கடகம்: ஆசாரக் குறைவுக்கும், அவசரப் போக்குக்கும் இடமுண்டு. இன்று அதிக பேச்சைத் தவிர்த்துக் கொள்ளவும், பூமிப்பிணக்கால் வழக்குவிவகாரங்களுக்கும் இடமேற்படலாம்.

சிங்கம்: இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று சிறப்பான தினம், கல்வியிலும் நல்ல அபிவிருத்தி தென்படும், தாய்வழிச் சுகமும் உண்டு.

கன்னி: வாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படும், அமைதியான நடவடிக்கைகள்மூலம் மற்றவர்களுடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள், ...டிலும் செல்வாக்கு உண்டு.

துலாம்: ஆயுதபிணைக்கு இடமுண்டு எனவே ...லும் அவதானம் விரும்பத்தக்கது அவசரப்போக்கு அனர்த்தங்களுக்கு இடமளிக்கலாம், தெய்வநம்பிக்கை நன்று.

விருச்சிகம்: சனிவான சம்பவங்கள் இடம்பெறும், காதலர்களுக்குக் கற்கண்டான தினம், தாம்பத்திய வாழ்க்கையில் பிணைப்புக்கள் மேலும் பலப்படுத்தப்படலாம்.

தனுசு: நண்பர்களே உங்கள் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாக அமைவார்கள், மொட்டைக் கடிதம் ஒன்று சிறிது பரபரப்பை ஏற்படுத்தலாம், தொழிலும் நஷ்டம் ஏற்படலாம்.

மகரம்: உயர்ந்த எண்ணங்கள் உங்களைப் புகழின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும், தந்தைவழியால் தனவரவுக்கும் இடமுண்டு, தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும்.

கும்பம்: பணம் தாராளமாகக் கிடைக்கும், சிலருக்கு அதிர்ஷ்ட தேவதையின் அணைப்பும் உண்டு, கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரியின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

மீனம்: புதிய தொழில் மூலம் லாபம் கிடைக்கும், புத்திரர்களுடைய செல்வாக்குப்பெருகும், புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும், பூமியால் முன்னேற்றமும் உண்டு.

சோதிடக்கலாநிதி
நிநாவை க. வேலுப்பிள்ளை

த. சண்முகராசா,
பட்டத்தரணியும்,
பிரசித்த நொத்தாரிசும்,
சொண்டாவில்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண
மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தைச் சேர்ந்த ஐந்நூறாஸ் மாதாம் வீதி, முகம்மது சுல்தான் முசம்மது மீரான் முகிதீனுடைய மரணசாதனம் சம்பந்தமான விடயத்தில்

— மரணமெய்தியவர்

மீரான் முகிதீன் கைம்பெண் ஜமீலா, ஐந்நூறாஸ் மாகாம் வீதி முஸ்லிம் வட்டாரம் யாழ்ப்பாணம்.

— மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கானது மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மனுதாரால் மேற்சொல்லப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தினை எண்பிப்பதற்காகவும், குறித்த மரணசாதனத்தின் மூலம் சுகைபெறுவரென்ற முறையில் குறித்த மரணசாதனத்தின் பிரதி இணைக்கப்பட்ட மேற்சொல்லப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்துக்கள் மீதான நிர்வாகத் தத்துவப்பத்திரங்கள் பெறுவதற்காக தாக்கல் செய்யப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும், 1980ம் ஆண்டு மார்கழி மாதம் 12-ம் திகதி முற்பகல் 9-30மணிக்கு இந்நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 18-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்

தயாரித்தது
த. சண்முகராசா
மனுதாரின் பதிவுபெற்ற
தரணி
7398

# அந்தியேஷ்டி அழைப்பு

## அமரர் பொன் சிவபாலன்

தோற்றம் 3-11-49 மறைவு: 1?-10-80



எமதுகுடும்பத்தலைவரின் அதிர்ச்சி மிக்க பிரிவின் போது உடனின்று உதவிகள் அளித்தவர்களும், இறுதிக்கிரியைகளிலும் பிரிவத்துன்பத்திலும் பங்கு கொண்டவர்களுக்கும் முதலில் எமது மனமார்ந்த நன்றி. அமரரான சிவபாலன் அவர்களின் ஆத்மசாந்திக்கான கிரியைகள் 24-11-80 திங்கட்கிழமை கீரிமலையிலும் இல்லத்திலும் நடைபெறும். இவைகளில் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவ... ...ய ...யடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

குடும்பத்தினர்.

70, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
7409

# "பொறுமை, போட்டிகளை மாணவர் தவிர்க்கவேண்டும்"

(அரியாலை)

"பொறுமை போட்டி என்பவற்றைத் தவிர்த்து மாணவர்கள் சேவை புரிய முன்வரவேண்டும். மாணவரிடையே சேவை செய்யும் தன்மையையும் நல்ல குணத்தையும் வளர்க்குமுகமாகவே லியோ சழகம் எமது கல்லூரியிலே அமைக்கப்படுகிறது".

இவ்வாறு யாழ். பரியோவான் கல்லூரிஅதிபர்திரு சீ. ஈ. ஆனந்தராசா பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற லியோ சழக அமைப்புக் கூட்டத்தில் தொடக்கவுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

லயன்ஸ் எஸ். இராசேந்திரா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு, ஆனந்தராசா தொடர்ந்து பேசியதாவது:

"1964ம் ஆண்டில் எமது கல்லூரியில் அமைக்கப்பட்ட இன்ரறக் கழகம் இக் கல்லூரிக்கும் சமூகத்துக்கும் அளப்பரிய சேவைகளைச் செய்துள்ளது. அக்கழக அங்கத்தவர்களின் முயற்சியினுல் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இரண்டு பேருந்து நிலையங்களை அமைத்துப் பொதுமக்களின் பாவனைக்கு உதவியது என்றார்.

யாழ் லயன்ஸ் சழகத் தலைவர் லயன் எல் ஆர். முத்தையா பேசுகையில் லியோ கழகத்தின் மூலம் வேலைத்திட்டங்களை மேற் கொள்ளும் போது ஒவ்வொரு அங்கத்தவனும் தனது பங்கைச் செலுத்த வேண்டும். அங்கத்தவர்கள் எதுவித பலனையும் எதிர்பாராமல் சேவையைச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்.

லயன் வைத்தியகலாநிதி யோகு. பசுபதி பேசுகையில் "சிக்காகோ நகரில் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட லயன்ஸ் சழகம் இன்று உலகம் முழுவதும் பரந்துள்ளது. அத்துடன் 10 லட்சம் அங்கத்தவர்களைக் கொண்ட பேரியக்கமாகவும் அமைந்து செயல்பட்டு வருகிறது" என்று குறிப்பிட்டார்.

லயன் டி. எஸ். ஞானப்பிரகாசம் பேசுகையில் "லயன்ஸ் சழகத்தின் கிளையாக இயங்கும் லியோ சழகம் ஒன்று யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் முதன் முதல் பரி. யோவான் கல்லூரியிலே அமைக்கப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும்" என்று குறிப்பிட்டார்.

யாழ் லியோ சழகத்தலைவர் லியோ அருள்நம்பி பேசுகையில் மாணவர்கள் வேற்றுமைகளைப் பாராட்டாது சேவை மனப்பான்மையுடன் ஒரே குடும்பமாக செயல்பட வேண்டும்" என்று குறிப்பிட்டார். மற்றும் லயன்ஸ் சழகப்பிரதிகளும் உரையாற்றினர்கள். (ஈ)

## உறுப்பினர் கலந்துரையாடல்

(நெல்லியடி)

கட்டைசவலி - உடுப்பிட்டி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் உயரதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பொன்னம்பலம் வித்தியாசாலையில் நடைபெறவிருக்கிறது.

இக்கலந்துரையாடலில் உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு.த. இராசலிங்கம், யாழ். கூட்டுறவு உதவி அத்தியட்சகர் ஆணையாளர் திரு. ச. வேலாயுதபிள்ளை, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (கு

## ஒளி பெறுத ஒளி விழா

(பச்சிலைப்பள்ளி)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினரால்பளை மகாவித்தியலயத்தில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த ஒளி விழாவில் கலந்து கொள்ளச் சென்ற கிளிநொச்சி எம்.பி திரு.வீ ஆனந்த சங்கரி ஒளி இன்மையால் மூன்று மணித்தியாலங்கள் காத்து இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

விழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இம் மகா வித்தியாலத்தில் போதிய அளவு மின்சார உபகரணங்கள் இன்மையினுலேயே விழாவினைஒழுங்கு செய்வதில் தாமதம் ஏற்பட்டது. கிளிநொச்சிஎம், பி அங்கு உரையாற்றுகையில் போதிய அளவு மின்சார உபகரணங்களை மகா வித்தியாலயத்துக்குப் பெற்றுத்தருவதாக உறுதியளித்தார்.

# கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு 556

சரவணமுத்து குமாரவேல், தொல்புரம்.

வழக்காளி

எதிராக

நாகலிங்கம் கந்தசாமி, இல. 14/2, அம்மன்றேட், யாழ்ப்பாணம்.

எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு/556-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1980-ம் வருஷம் மார்கழி மாதம் 10-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 8520/-ம் 9-9-1977 தொடக்கம் 29-3-1979 வரைக்கும் ரூபாய் 6000/-க்கு 18 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 549 95.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை சோலிப்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கிறை இலகடி பர. நிலை. இலா மூன்றும் குளி எட்டோடு எட்டில் மூன்றும் (பா. நிலை. இல 8 குளி 8 3/8) இதில் வடகிழக்குப் பக்கமாக குளி ஆறும்(குளி 6) கடைக் கட்டிடமும் முன் விறுந்தையும் மிகுதிக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும் எல்லை கிழக்கு பலாலி றோட், வடக்கு நாவலர் றோட், மேற்கும் தெற்கும் நடராசா பெண் சண்முகவடிவுக்குரிய மிகுதி நிலம் இதடங்கலும் முற்பதிவு யாழ்ப்பாணம் D 368/73.

மு. நவரத்தினராசா,
யாழ். மாவட்டக் கோட்டு
விற்பனவு ஆணையாளரும் விலைமதிப்பாளரும்-

"கமலபதி",
ஆஸ்பத்திரி வீதி,
வண்ணைடதீவு,
15-11-80.

7407

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்புவாதக் கலவரங்களைத் தடுக்க, இன ஒற்றுமை பேண ஆறுஅம்சத் திட்டம்

## மத்திய அரசு அறிவிப்பு

புதுடில்லி, நவ. 21 வகுப்புவாதக் கலவரங்களைத் தடுக்கவும், இனஒற்றுமையைப் பேணும்பொருட்டும் மத்தியஅரசு 6 அம்[illegible] மொன்றை மாநிலங்[illegible] யூனியன் பிரதேசங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இத் திட்டம் சம்பந்தமான விபரங்களைத் தெரிவித்த மத்[illegible] திரு. மயாகேந்திரா மக்வானா கூறியதாவது: மோசமான வகுப்புவாதக்கலவரங்கள் ஏற்படும்போது நிர்வாகத்தினரை துரிதமான விசாரணையொன்றை நடத்துமாறு மாநிலங்களிடம் மத்திய அரசு ஆலோசனை கூறியிருக்கிறது.

பொலிஸ்படையில் சிறுபான்மை வகுப்பினருக்கும் போதியளவு பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டுமென்று [illegible] அரசு கருதுகின்றது.

வகுப்புவ[illegible]ங்கள் மீது கட்டுப்பாடுவி[illegible]மாறும், வகுப்புவாத வன்முறைக் கலவரங்களில் ஈடுபடுவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்குமாறும் மாநில அரசுகளை மத்தியஅரசு கேட்டுள்ளதென்றார். (வெ)

## தேசிய ஒருமைப்பாட்டு வாரம்

புதுடில்லி, நவ. 21 ஜம்முகாஷ்மீரில் தேசிய ஒருமைப்பாட்டுவாரம் கொண்டாடப்பட்டு வருகிறது. தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்த பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி எடுத்துவரும் முயற்சிகளுக்கு பெருமளவில் மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாக இம் மாநிலத்தின் இந்திராகாங்கிரஸ் தலைவர் தெரிவித்தார் (வெ)

## "உலகில்பதட்டநிலை, கெடுபிடி யுத்தம் அதிகரித்துள்ளது"

### இந்திய ஜனாதிபதி கவலை

புதுடில்லி, நவ. 21 "உலகில் பதட்டநிலையும், கெடுபிடி யுத்தங்களும் அதிகரித்துவருகிறது நம்மைசுற்றியுள்ள உலகில் கொதிப்பும், கொந்தளிப்பும் ஏற்பட்டுவருகிறது இந்துசமுத்திரப்பிராந்தியம் அமைதிப்பிராந்தியமாக இருந்துவருவதற்குப் பதிலாக வல்லரசுகளின் போட்டிக்கும் பதட்டத்திற்குமுரிய ஒரு களமாக இருந்துவருகிறது"

மேற்கண்டவாறு இந்திய ஜனாதிபதி திரு நீலம்சஞ்சீவ ரெட்டி இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள பர்மா அதிபர் திரு. நெவினிற்கு அளித்த அரசவிருந்தில்உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அந்த தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: உலகின் பதட்டநிலையைக் குறைப்பதற்கு எம்மாலான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ளவேண்டும். பர்மாவும், இந்தியாவும் நெடுங்காலமாக நட்புறவு கொண்டுவருகின்றன. அவ் உறவு தொடர்ந்தும் நீடிக்க வேண்டும்.

பர்மா அதி[illegible]ர் திரு.நெவின் இவ் விருந்துபசாரத்திற்கு நன்றிதெரிவித்து பேசுகையில் கூறியதாவது: உலகில் நெருக்கடி தோன்றிவருகிறது. சர்வதேச நிலமைகள் குறித்து இந்தியாவும், பர்மாவும் நெருங்கிய முறையில் ஒத்துழைத்துவரு[illegible]ன்றன என்றார். [வெ]

## யுரேனியத்தை வழங்குமாறு

### இந்தியா கோரிக்கை

புதுடில்லி, நவ. 21 தாராப்பூர் அனல்மின்சார நிலையத்திறகு யுரேனியத்தை தாமதம்செய்யாது வழங்குமாறு அமெரிக்காவை இந்தியா கேட்டுள்ளது.

அனல்மின்சாரம் வழங்குவது தொடர்பாக இந்தியாவிற்கும் அமெரிக்காவுக்குமிடையே 1963ம் ஆண்டில் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதன்பிரகாரம் இந்தியாவிற்கு யுரேனியத்தை வழங்க அமெரிக்கா கடமைப்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்பட்டது. (வெ)

## ரூபா 60,000 புடவைகள் கைப்பற்றப்பட்டது

புதுடில்லி, நவ. 21 இலங்கைப்படகொன்றில் இருந்து சுமார் 60,000 ரூபா பெறுமதியான பட்டுப்புடவைகள் கைப்பற்றப்பட்டதாக இந்தியாவின் மத்திய சுங்க கலெக்டர் தெரிவிததார்.

இப் படகில் பிரயாணம் செய்தவர்கள் தப்பியோடிவிட்டார்களென்றும் அவர் கூறினர். (வெ)

## ரூ. 30 லட்சம் செலவில் தங்கரதம்

சென்னை, நவ. 21 தமிழ்நாடு திருப்பரங்குன்றம் முருகன் ஆலயத்திற்கு 15 லட்சம் ரூபா (இலங்கையில் ரூபா 30 லட்சம்) செலவில் தங்கரதம் ஒன்று உருவாக்கப்பட இருக்கிறது.

இதற்கான ஆரம்ப வேலைகள் அடுத்த ஜனவரியில் ஆரம்பிக்கப்படும் என்று மதுரை மீனாட்சி அம்மன் கோயிலைச் சேர்ந்த தர்மகர்த்தா ஒருவர் கூறினர். (இ)

## அம்பனில் உரக்களஞ்சியம்

(நெல்லியடி)

அம்பன் என்னும் பகுதியில் நிறுவப்படவுள்ள உரக்களஞ்சியத்திற்கான அடிக்கல்லை, அம்பன் கமநலசேவைநிலைய பெரும்பாக உத்தியோகத்தர் க பீதாம்பரப் நாட்டிவைத்தார்.

சுமார் 28 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இக் கட்டிடவேலைகளை, அம்பன் கிராமஅபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்றுள்ளது (க)

## தமிழறிஞர் 12 பேருக்கு சிலை

சென்னை, நவ. 21 ஜனவரிமாதம் மதுரையில் நடைபெறவுள்ள ஐந்தாவது உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டை முன்னிட்டு 12 தமிழறிஞர்களுக்கு சிலைகள் நிறுவப்படுமென்ன தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. (வெ)

## கமலம் கொலைவழக்கு

(புலோலி)

பொலிகண்டி டியூட்டரி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலைவழக்குவிசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் யாழ். மேலதிக நீதவான் திரு. நாகராசா முன்னிலையில் எடுக்கப்பட்டு இம்மாதம் 25ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு விசாரணை மீண்டும் இம்மாதம் 25ம் திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே எஸ். [illegible]ன் முன்னிலையில் [illegible] கெடுத்துக் கொள்[illegible] தொடர்ந்து விசாரணை செய்யப்படும். (அ)


மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்டில் உங்கள் சேமிப்பினை முதலிடும்போது நீங்கள் அடையும் நன்மைகள் பலவிதம்

மொத்த ஆதனம் ரூபா 25 கோர்டிகளுக்கும் மேலாகக்கொண்டு
மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட் இலங்கையின் மிகப்பெரிய நிதி நிறுவனமாக விளங்குகிறது.
மூலதன ஒதுக்கீடுகளும் முன் ஏற்பாடுகளுமாக ரூபா 3 கோடிக்கும் கூடுதலாகக் கொண்ட
உறுதியான நிதி நிறுவனம் மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்.
தனியார் வைப்புக் கணக்காக 15 கோடிக்கும் அதிகமாகத் தன்னகத்தே கொண்டு
பொது மக்களின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமாகத் திகழும் நிறுவனம்
மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்.
உங்கள் வசதிக்கேற்ற வகையில் தெரிவு செய்ய வல்ல முதலீட்டு திட்டங்கள்
மாதாந்தமோ அல்லது முதிர்ச்சியின் பின்னரோ பெறக் கூடிய கவர்ச்சிகரமான வருமானம்

ஒருவருடவைப்புத் திட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| மாதாந்தச் செலுத்தப்படுவது | 20% | முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படுவது | 22% |

அதி குறைந்த வைப்புத் தொகை ரூபா 2,500/-

இரு வருடவைப்புத் திட்டங்கள்

| மாதாந்தம் செலுத்தப்படுவது | | முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படுவது | |
|---|---|---|---|
| ரூபா 2,500/-ல் இருந்து ரூபா 50,000/- ற்கும் கீழ் | 21% | ரூபா 2,500/-ல் இருந்து ரூபா 50,000/- ற்கும் கீழ் | 24% |
| ரூபா 50,000/-ல் இருந்து ரூபா100,000/- ற்கும் கீழ் | 22% | ரூபா 50,000/-ல் இருந்து ரூபா100,000/- ற்கும் கீழ் | 25% |
| ரூபா 100,000/- ல் இருந்து அதற்கும் மேல் | 24% | ரூபா 100,000/- ல் இருந்து அதற்கும் மேல் | 27% |

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்
இலங்கையின் மிகப்பெரியதும் உறுதிவாய்ந்ததுமான நிதி நிறுவனம்.
51-53, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 1. தொலைபேசி 26611-19
கிளைகள்: யாழ்ப்பாணம்: 11/8 ஸ்டான்லி வீதி, தொலைபேசி: 321
மாத்தறை 27-1/1, தர்மபால மாவத்தை, தொலைபேசி 2466
அனுராதபுரம் 2, ஹரிச்சந்திரா மாவத்தை. தொலைபேசி 534
கண்டி 901/A பேராதனை வீதி, தொலைபேசி 4196
தொடர்புகொள்வோர்கள் (ஏஜன்ட் மார்) எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளனர்.

"மேலதிக விபரங்களுக்கு எமது யாழ்ப்பாணக் கிளை [illegible]"

MASTERS


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எண்ணெய் இல்லாது தீபம் எரியாது; அது போன்று கடவுள் இல்லாது மனிதன் உயிர் வாழ முடியாது.

—சுவாமி சிவானந்தர்

## நமது நோக்கு

### அரசியல் நாடகம்

அரசாங்கத்தின் நான்காவது பட்ஜட்டின் இரண்டாவது வாசிப்புமீதான வாக்கெடுப்பு இனிது நிறைவேறிய .

இரண்டொரு எதிர்க்கட்சி அங்கத்தவர்களைத் தவிர ஏனையோர் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை விவாதத்தில் தெரிவிக்கத் தவறிவிட்டனர். இன்றைய பட்ஜட் விவாதம் மேகத்தைப்போல் எல்லையற்ற பேச்சுக்கு இடமளிக்கிறது.

சபையில் இடம்பெற்ற காட்சிகள் மக்களுக்கு நிவாரணம் அளிக்க உதவுமென நம்பஇடமில்லை. ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சிகளும் நாட்டின் இன்றைய நெருக்கடிக்கப்பாலிருக்கும் அரசியல் விவகாரங்களைப் பொருத்தமற்ற முறையில் பேசியிருப்பது ஏமாற்றத்துக்குரியது.

கண்டனங்கள் பல; பாராட்டுக்கள் அவற்றிலும் அதிகம். பிரதமர் நேசக்கரம் நீட்டுகிறார், ஆனால் மந்திரி மத்தியூ துவேஷம் பேசுகிறார் என்ற அளவில் விவாதம் திருப்பியிருந்தது.

சுதந்திரம் எமது பிறப்புரிமை'' என்றும்; அதற்கு மறுத்தானக ''எனது தலையைத்தரவும் தயார்; ஆனல் தனிநாட்டை ஒருபோதும் தரமுடியாது'' என்றும் விதம் விதமான விஞேத வரிகளில் ஒருதரை ஒருவர் 'அடித்தலும்' 'அணைத்தலும்' நடைபெற்றதாகப் பத்திரிகைகளைப் படிப்பவர் கருத இடமுண்டு

''சுதந்திரம் எமது பிறப்புரிமை என்ருல், அதனை எவ்வாறு வேருெருவர் தருவது; தனிநாடு என்ற 'பொருளை' உற்பத்தி செய்வது யார்? பிரதமர் பிரேமதாசாவின் கையில் இருப்பதாகச் செய்தியில் வழங்க வேண்டியிருக்கிறது; அப்படியானல் அது ஒருபோதும் கிட்டாத பண்டமென நாம் கொள்ளவேண்டும்.

இந்தநிலை ஒருசோகமான நிலை. தனிநாடு கோரிநிற்கும் தமிழர் கூட்டணியில் பிரதமர் பிரேமதாசாவுக்கு அளவுகடந்த அன்பும் அபிமானமும் இருப்பது போல் தெரிகிறது. எதனையும் இவர்களுக்கு உவத்தயாராக விருக்கும் அவர் எட்டாத கொம்பிலிருக்கும் தனிநாட்டை எப்படிக் கொடுக்க முடியும்?

'நாய் வேட்டைக்குத் தவில் அடிப்பது' மக்களைத் திரட்டுவதின் ஒரு தனித் தந்திரம். இன்று வாக்குரிமை பெற்று ஐம்பது வருடங்களுக்குப் பின் மக்கள் மனத்தை, பட்டினியிலிருந்து திசைதிருப்ப என்ன நாடகம் நல்லது என்ற ஒரே நோக்கை, ஆட்சியாளர் மட்டுமல்ல பாராளுமன்றத்தில் வீற்றிருக்க விரும்பும் எவரும் நாடுவது இயல்பு.

அரசியல் நாடகத்தின் ஒரு முக்கிய அம்சமாக இன்று யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடக்கவிருக்கும் பொதுக்கூட்டம் அமைகிறது.

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க எவ்வித உத்தியோக பாரமுமின்றி இலகுவாக யாழ்ப்பாண வரவசதி கிடைத்திருக்கிறது. பிரதமராயிருக்கையில் அவருடைய யாழ்ப்பாண விஜயம் எவ்வளவு தடைகள் தாமதங்கள் மத்தியில் நிறைவேறிய தென்பதை நாம் மறக்கவில்லை.

அவரை யாழ்ப்பாணத்திற்குவருகவென்று வரவேற்க எமக்கிருந்த தயக்கம் இன்றும் நினைவிருக்கின்றது. யாழ்ப்பாண வளாகத்தைத் திறந்து வைக்கும் வைபவம் எமது தயக்கத்தை நீக்கியது. இன்று ஒரு எதிர்கட்சியின் தலைவியாக வரும் அம்மையாருக்கு யாழ்ப்பாண மக்களின் தமிழ் மக்களின் பெருமை பற்றியும் அவர்கள் படும் சிறுமை பற்றியும் அறிய உணர நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும்;

தமிழர் விடுதலைக் கூட்டணி தங்கள் நகரத்திற்கு ஏனைய நான்கு கட்சிகளையும் வரவேற்றுஒரே மேடையில் ஒற்றுமைப்பட்டு முக்கிய பிரச்னைகளை மக்களுக்கு விளக்க முற்பட்டது ஒரு நாடகக்காட்சியாக இருந்தாலும் மக்களுக்கு ஆறுதல் அளிக்க வல்லது. ஏன்? சிறைக்கடைக்குளதிர்க்கடை இல்லாமற் போய் விடுமோ என்ற அச்சத்தில் வாழும் நாம் ஐந்துகட்சிகள் சில விடயங்களிலாவது இன்றைய நிலையில் ஒற்றுமைப்படுகிறார்கள்.

இது ஒரு வெறும் நாடகம் என்று கருதுபவரும் இக்கூட்டத்தைப் பார்க்கத் தவறமாட்டார். நடிகர்களே நாட்டின் மன்னர்களாகத் தெரிந்தெடுக்கப்படும் காலத்தில் வாழும் நாம் இவ்வித நாடகத்தில் உருவாகும் சூழ்நிலை நமக்குச் சாதகமாக விருக்கலாம் என்று மனப்பால் குடிக்க இடமுண்டு.

எது எப்படியானலும் அரசின் சர்வாதிகாரப் போக்கை எதிர்த்து வேலை இழந்தவர்களுக்கும் விலைவாசி ஏற்றத்திற்கும் தீர்வு காணமுடியுமானல் இவ்வித அரசியல் நாடகம் அவசியமே!

# இருளகற்றும் திருவிளக்கு

திருக்கார்த்திகைத் தீப இவ்விழா தமிழ்நாட்டிலே மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு விழாவாகும். இவ்விழா சைவசமயத்தவர்கள் கொண்டாடும் மகத்துவமும் புனிதமுமான பண்டிகைகளில் ஒன்று. இது கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை (கிருத்திகை) நட்சத்திரத்திலே கொண்டாடப்படும் கார்த்திகை நட்சத்திரத்துக்கு முன்னர் பரணியும் பின்னர் ரோகிணியும் உள. கார்த்திகைப் பூரணை சில காலத்தில் கார்த்திகை நட்சத்திரத்துடன் நிகழும். சில காலத்தில் பரணியோடு கூடி நிகழும், சில சமயம் ரோகிணியுடன் கூடி வரும் இவற்றுட் கார்த்திகையுடன் பௌர்ணமி சேர்ந்தால் அது பத்மயோகம் எனப்படும். ரோகிணியிற் சேர்ந்தால் அது மகா கார்த்திகை எனப்படும் இத்தினம் திருக்கார்த்திகை விரதம், கார்த்திகை தீபம், விளக்கீடு எனப் பல பெயர்களால் அழைக்கப்படும்.

கார்த்திகைத் தீபோற்சவத்திற்கு முதல்நாள் வீடுகளிலும் பிறவிடங்களிலும் தீபமேற்றிக் குதூகலமாகக் கொண்டாடுவர். இத்தினம் எல்லாத்திருக்கோவில்களிலும் திருவிழா நடக்கும். குமரன் கோவில் கொண்டுள்ள ஆலயங்களில் கார்த்திகைத் தினத்திலே தீபமேற்று உயரமாகக் கட்டப் பட்டிருக்கும் சொக்கபனையை எரிப்பது வழக்கம். சொக்கப்பானை என்று நம்மவர்கள் பலர் கூறுவதுண்டு. சொர்க்கப்பானை எனவுங் கூறுவர் சிலர். இவை பிழை. 'சுட்கப்பனை' என்னுஞ் சொற்றொடர் திரிந்து சொக்கப்பானை என வழங்கப்படுகிறது. சுட்கம் என்பது வரட்சி உலர்ந்த தென்னை, பனை, கமுகு, வாழை இவற்றின் தண்டினைத் தீ தண்டமாக கோயிற் சந்நிதானத்தில் நட்டு உயர்ந்த பனைஓலை முதலியவற்றால் விமானம்போல உயரமாக மூடி கட்டிய [illegible] எனப் படுஞ் சுட்கப்பனையை [illegible] மூட்டி அது சுவாலித் தெரியும் போது சோதி சொரூபமாகவும், திருவண்ணாமலைத் தீபமாகவும் பாவித்துப் பக்தர்கள் வழிபடுவர்.

திருவண்ணாமலையிலே இந்த விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது திருவண்ணாமலைத் தீபம் பலமைல் தூரம் பிரகாசிக்கும், இக்காலத்தில் பல்லாயிரக்கணக்கானேர் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் திருவண்ணாமலைக்கு யாத்திரை செய்வர், நாம் வழிபடுவதற்கு திருவுருவமாகக் கொண்டது ஒளியனையே. அன்றுதொடக்கம் இன்றுவரை திருவிளக்கு வழிபாட்டினைத் தமிழகம் [illegible] ஈழமும் கைக்கொண்டு ஒழுகிவருகின்றது. திருக்கோயிலிலே திருவிளக்கிட்டாரை தெய்வம் அறியும் என்பதற்கு இணங்க அடையும் பயன்கள் மிகவும் பெரிது,

'விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்நெறி ஞானமாகு' என அப்பர் சுவாமிகள் சொல்லுகின்றார். கணம் புல்லநாயனார், திருவிளக்கேற்றிச் சிவலோகப்பதவியைஅடைந்தார். நமிநந்தியடிகள் நீரினலே விளக்கேற்றி நீங்காச் சிவபதமடைந்தார், கலிய நாயனார் சிவாலயத்தின் உள்ளும் புறமும் திருவிளக்கேற்றித் தேவதேவன் திருவடியடைந்தார்.

இவற்றால் திருவிளக்கே இருளகற்றும் பெரும்பொருள் விளக்கமாகின்றது

புராணங்களிலும் சங்க நூல்களிலும் இறைவன் சோதிவடிவானவன் எனக் கூறப்படுகிறது. இறை வழிபாடு முதலில் சூரிய வழிபாடாயிற்று அதன் பின்னர் அது ஒளி வழிபாடாயிற்று. பின்னர் அது ஒளி வழிபாடாக பரிணமித்து அந்த ஒளி வழிபாடே திருவிளக்கு வழிபாடாகும். இதுவே திருக்கார்த்திகைத் தீபமாயிற்று. இத்திப மகிமை குமரன் ஆலயங்களில் விசேடமாக நடைபெற்றுவருகின்றது.

'எல்லா வுலகமு மானாய்
நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய்
நீயே
நல்லாரை நன்மை அறிவாய்
நீயே
ஞானச் சுடர் விளக்காய்
நின்றாய் நீயே

''இல்லக விளக்கது இருள்
கெடுப்பது
சொல்லக விளக்கது
சோதி யுள்ளது
பல்லக விளக்கது
பலரும் காண்பது
நல்லக விளக்கது
நமச்சிவாயவே.

- அப்பர் சுவாமிகள்.

''விளக்கினை ஏற்றி
வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே
வேதனை மாறும்
விளக்கை விளக்கும்
விளக்குடையார்கள்
விளக்கில் விளங்கும்
விளக்கவர் தாமே.

(திருமந்திரம்)

''எல்லா விளக்கும்
விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

(திருக்குறள்)

-இ. சரவணபவன்

## மக்கள் கருத்து

### நந்தாவில் ஒழுங்கையின் பரிதாபம்

தாவடி நத்தாவில் ஒழுங்கையைத் திருத்துவதற்கு உடுவில் கிராம சபை பின்நிற்பது ஏன்? சைக்கிள்களும், கார்களும் செல்லமுடியாதநிலையில் உள்ள இப்பாதையில் இருண்டால் நடமாடமுடியாத ஒரே இருட்டு. மழை பெய்தால் ஒரே வெள்ளம் இரண்டு முழ வெள்ளத்தில் கூரிய கற்கள் பாதசாரிகளின் காலையும், சைக்கிள் ரயர்களையும் பிளந்துவிடும் பரிதாபக் கோலம். மழைவிட்டாலும் சேறும் சகதியுமாய் நடந்து செல்பவர்கள் சறுக்கி விளையாடும் இடமாய் உள்ளது. காட்டுப் பகுதியில்கூட இப்படியான ஒரு பாதையைக் கண்டுபிடிப்பது கஷ்டம். இனியாவது தாவடி மக்களின் மனக்குறைதீர உடுவில் கிராம சபை நடவடிக்கை எடுக்குமா? இனியாவது பாதசாரிகள் நடமாடக்கூடியதாக பாதையைத் திருத்தி இரண்டு மூன்று வீதி விளக்குகளாவது போட்டு கிராம சபையினர் மக்களுக்கு நன்மை செய்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

செ. சத்தியமூர்த்தி,
தாவடி, கொக்குவில்.

ஃ ஃ ஃ

### எங்கள் வாழ்வு இருட்டினிலே

மக்கள் பிரதிநிதிகள் கைகளிலே மாநகர நிர்வாகம், எங்கள் வீடுகளிலோ இருள் கோலம் வாரம் இரண்டு இரவாவது மின்சாரத் துண்டிப்பு. எத்தனை நாட்கள்தான் பொறுப்பது. ஒன்றல்ல இரண்டல்ல சிலவேளை தொடராக பலநாட்கள். மாநகரசபையின் கண்ணுக்குத்தெரியாதது வேடிக்கை, எத்தனையோ வேலைகள் இரவு இருட்டால் தடைப்படுவதும் எத்தனையோ தொல்லைகள் மின்சாரத்துண்டிப்பால் வளர்வதும் தான் நாம் வாக்களித்ததற்குப் பெற்ற பரிசுகள்.

13ம் வட்டாரம் மிகப்பெரிய மாநகரவாக்காளர் வட்டாரம். விகிதாசாரப் பிரதிநிதித்துவம் எத்தகைய தாக்கல்களைத் தரும் என்பதற்கு இவ்வட்டாரம் ஒரு பரிசோதனைக்களம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் வெற்றிக்குத் தலைவர் கல்இட்ட இடம் இன்று யாருமே தேடுவாரற்றகளம். 13ம் வட்டாரத்துக்கு மாநகரசபை செய்த வைகளை வேலைவழங்கிய தொகைகளை முடியுமானல் வெளியிடட்டும். அதற்குமுன் இருளைப்போக்கட்டும். இதுவே எங்கள் வேண்டுகோள்.

பற்றிமாகரன்
13ம் வட்டாரம்.
யாழ்ப்பாணம்.

### மூத்தநயினர் ஆலயத்தில் இன்று

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை அருள்மிகு மூத்தநயினார் திருக்கோயில் திருக்கார்த்திகைத் திருவிழா இன்று காலை 9 மணி முதல் மூல மூர்த்திகளுக்கும் பகல் 3 மணி முதல் ஆறுமுகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சண்முகப் பெருமானுக்கு மாலை ஆறுமுக அர்ச்சனை ஆகி மயில் வாகனத்தில் எழுந்தருளி சொக்கப்பனை எரித்து வெளிவீதி வலம் வந்து காட்சிதருவார்.

### திருக்கார்த்திகைத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், தருவண்ணை நகர் அருள்மிகு செந்தில்கதிர் வேலாயுத சுவாமி திருக்கோ கோயிலில் இன்று சனிக்கிழமை திருக்கார்த்திகைத் திருவிழா நடைபெறவுளது. காலை ஸ்நபனாபிஷேகம் ''அடிமுடி தேடுபடலம்'' பாட்டும் பயனும் இடம்பெறும், நண்பகல் அன்னதானம் மாலை சந்தனப் சாப்புச்சாத்தி ஆறுமுக அர்ச்சனை வழிபாடு நிகழும். இரவு வசந்தமண்டபபூசை, சொக்கப்பானை, தீபவழிபாடு ஆகியன இடம்பெறும்.

### சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா. வல்வட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அபிவிருத்திச் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம் மாதம் 30ம் திகதி ஞாயிறு பாலை பாடசாலை பிரார்த்தனைமண்டபத்தில் அதிபர் திரு சி கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு. வ.க. சுசுரபாதம், சிறப்புவிருந்தினராக திரு. ஆ. கந்தையா ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

(கவ)



## கீர்த்தி அருள்வாய்

ஈழ நல்லூர்க் குமரனவன்
நீல மயிலின் பக்தர் குழாம்
சூழப் பவனி வருகின்றான
கோல எழிலைக் காண்போமே.

பார்த்தோர் பரவசக் கூத்தாட
கார்த்தி கேயன் எமதாவல்
பூர்த்தி செய்ய வருகின்றான்
கீர்த்தி பெறவே வாருங்கள்.

அள்ளி இன்பஞ் சுரந்திடவே
வள்ளி தெய்வ யானையுடன்
சங்கம் வளர்த்த தமிழ்முருகன்
தங்க வேலாய்ப் பொலிகின்றான்.

வண்ண மலரும் நறுமணமும்
தென்றற் காற்றும் திருப்புகழும்
எண்ண இனிக்கும் முழமாறும்
இன்றே சுவைக்க வாருங்கள்.

தென்மட்டுவில்
சி. சதாசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகள் பிரச்னை ஆராய அதிகாரபூர்வமான மாநாடு

## அரசஅதிபர் கூட்டுவாராம்

(யாழ்ப்பாணம்)

வெங்காயம் மிளகாய் போன்ற உப உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் வடபகுதி விவசாயிகளின் உற்பத்தி சந்தைப் படுத்தும் பிரச்னைகளையிட்டுப் பரிசீலனை செய்வதற்கு உத்தியோகத்தர் உற்பத்தியாளரைக் கொண்ட அதிகார பூர்வமான மகா நாடொன்றைக் கூட்டுவதைப் பற்றி ஆராய்கின்றேன் இவ்வாறு யாழ். மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி வரைச் சந்தித்துப்பேசிய இலங்கைத் தேசிய விவசாயிகள் சம்மேளனத்தின் வடபிரதேசக் கிளையினரிடம் கூறினர்

இத் தூதுக் குழுவில் சம்மேளனத்தின் உபதலைவர் பொன் குமாரசுவாமி வட பிரதேசத்தலைவர் திரு. யே. குணரத்தினம் சம்மேளனத்தின் மத்திய குழுஉறுப்பினர் திரு. க.சுகுமாரன் ஆகியோர் அங்கம் வகித்தனர் மேற் டிகுழு தொண்டமானாறு நன்னீர்த் திட்டம் வவ்வெட்டித்துறை மயிலியதனை போன்ற பகுதிகளுக்குப் பிறிதொரு கமநல சேவை நிலையம் அமைத்தல பற்றியும் திருவையாறு வலிப குடியேற்ற திட்டத்தில யானைகளால் ஏற்படும் அழிவுகளைத் தடுப்பதற்கு மின்சாரம் இணைப்பது பற்றியும் விவசாயிகள் எதிர்நோககும் வேறு பல பிரச்னைகளை பற்றியும் அரசாங்க அதிபருடன் கலந்துரயாடினர் இவைபற்றித் தாம் பார்வையிட்டு ஆவன செய்வதற்கு' அரச அதிபா உறுதியளித்தார்.

## புங்குடுதீவு பெண் கொலை, கொள்ளைவழக்கு:

# வாயில் துணி அடைக்கப்பட்டு வெட்டுக் காயத்துடன் அம்மா இறந்து கிடந்தார்

## மகன் முத்துலிங்கம் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

சம்மட்டியால் பலமாக அடித்து பூட்டப்பட்டிருந்த அறைக்கதவை உடைத்து வெளியே வந்து பார்த்தபோது எனது தாயார் வாயில் துணி அடைக்கப்பட்ட நிலையில் கையில் வெட்டுக்காயத்துடன் பேச்சு மூச்சின்றித் திண்ணையில்கிடந்தார். அவருக்குப் பக்கத்தில் கத்தி ஒன்றும் காணப்பட்டது. தந்தையார் எனது தாயைத் தூக்கிப்பார்த்தார் தாயாரின் உயிர் பிரிந்திருந்தது தெரியவந்தது

புங்குடுதீவு இறுப்பிட்டி சின்னத்துரை அன்னம்மா என்ற மூதாட்டியைக கொலைசெய்து கொள்ளையடித்த வழக்கில் கொலைசெய்யப் பட்டவரின் மகனை சின்னத்துரை முத்துலிங்கம் சாட்சியமளிக்கையில் மேற் கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி கே என். திலகன் முன்னிலையில் நடைபெற்றது.

சின்னத்துரை அன்னம்மா (65 வயது) என்பவரைக் கொலைசெய்தது, அவரது வீட்டில் கொள்ளையடித்தது, கொள்ளைப் பொருட்களை வைத்திருந்தது சம்பந்தமாக புங்குடுதீவைச் சேர்ந்த சோமசுந்தரம் சுப்பிரமணியம், தம்பையா பிள்ளை குணசிங்கம், நல்லையா ஆனந்தன், கிருஷ்ணபிள்ளை பரமலிங்கம் ஆகிய நால்வர் மீதும் குற்றஞ்சாட்டி மேற்படி வழக்குத் தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

### ஓலமிட்டுக்கத்தினேம்

திரு. முத்துலிங்கம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது, எனது தாயார் இறந்து கிடப்பதைக் கண்டதும் நானும் எனது தந்தையாரும் ஓலமிட்டுக்கத்தினோம். எமது சத்தத்தைக்கேட்டு அயலவர்கள் ஓடிவந்தனர். பின்னர் நான் ஊர்காவற்றுறைப் பொலிசுக்குச் சென்று நடந்தவற்றைப் பொலிசாருக்குத் தெரிவித்தேன். பொலிசார் விசாரணையை மேற்கொண்டனர்.

### இங்கிலாந்திற்கு சென்றேன்

நான் கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முன் இங்கிலாந்திற்குச் சென்றேன். அங்கு கணக்காளராகக் கடமையாற்றி வந்த நான் ஆகஸ்ட்மாதம் 4ம் திகதி தாயகம் திரும்பினேன் வரும் போது ட்ரவலர்ஸ் செச், விலையுயர்ந்த உடுபுடைவைகள், கசற் றேடியோ, பிரண்டிப்போத்தல்கள் ஆகியவற்றைக் கொண்டு வந்திருந்தேன்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி இரவு தாய்தந்தையருடன் புங்குடுதீவிலுள்ள எமது வீட்டில் படுத்திருந்தேன் எமது வீட்டில் மின்சாரம் இடையாது மண்ணெண்ணை விளக்குத்தான் பாவிப்போம். விளக்கைஅணைத்துவிட்டு நித்திரைக்குச் சென்றுவிட்டோம்.

### நாய் குரைத்த சத்தம் கேட்டது

அதிகாலை இரண்டரை மணியளவில் அயல்வீட்டு நய் குரைத்துச் சத்தம்கேட்டது. நாய் குரைகிறது எழும்பிப் பார்ப்போம் எனத் தந்தையிடம் கூறினேன். மாடுகளைக் கண்டு நாய்குரைக்கிறது பேசாமல்படு எனத் தந்தை கூறினர் படுத்துவிட்டோம். சுமார் 10 நிமிட நேரத்தின் பின் வீட்டுத் திண்ணைக்கு வந்த இருவர் அப்பாவின் மூகத்திற்கு நேராக ரோச்லைட் அடித்தது தெரிந்தது, வந்தவர்களில் ஒருவர் கத்தியைக்காட்டி திறப்பைத் தருமாறு தந்தையை மிரட்டினர் தலையணைக்குக்கீழ் வைத்திருந்த திறப்பை தந்தை எடுத்துக் கொடுத்தார் அப்போது நான் கட்டிலைவிட்டு எழும்பமுயற்சித்தேன். ஒருவர் கிறிஸ்கத்தியை எனது கழுத்துக்குநேரே நீட்டிச் சத்தம்போட்டால் கொலைசெய்துவிடுவேன் எனக் கூறி மிரட்டினர். அதனல் நான் பேசாது இருந்துவிட்டேன்.

### தாயார் கூக்குரலிட்டார்

தந்தையையும் என்னையும் வீட்டிற்குள் அழைத்துச் சென்றுர்கள் அறைக்கதவு பூட்டப்பட்டிருந்தது இருவரில்ஒருவர் கதவைத்திறக்க முற்பட்டார் முடியாதுபோகவே தந்தையிடம் திறப்பைக் கொடுத்து கதவைத்திறக்கும்படி கூறினர் தந்தையார் கதவைத்திறந்துவிட்டார் எங்களை அறைக்குள் போகும்படி பயமுறுத்தினர். அவ்வேளையில் எனது தாயார் விழித்து எழுந்து கூக்குரலிட்டார். அப்போது 3வது நபர் ஒருவர் ஓடிவந்து அம்மாவை எழும்பவிடாதும், கூச்சுரல் போடவிடாதும் அமர்த்திப் பிடித்து அவரின் வாயைப் பொத்தினர். அம்மா திமிறியடித்தபடியிருந்தபோது ரோச் லைற்றுடன் நின்றவர் ''அமர்த்திப் பிடி அமர்த்திப்பிடி'' என்று கூறினர். எவரும் சத்தம் போட வேண்டாமென அம்மாவைப் பார்த்துக் கூறினர்.

### சூட்கேஸை திறக்கச்சொன்னர்

எங்களை ஒன்றும் செய்ய வேண்டாம் உங்களுக்குத் தேவையானவற்றைத் தருகிறேம் என்றேன்.

என்னையும் தந்தையையும் அறைக்குள் அழைத்துச் சென்று வெளிநாட்டில் இருந்து கொண்டுவந்த நகையையும் பணத்தையும் தரும்படி கேட்டார்கள். அறைக்குள் இருந்த சூட்கேசை திறக்குமாறு என்னைக் கேட்டனர் அது கொம்பினேசன் பூட்டுள்ள சூட்கேஸ் எனக்குத திறக்கத்தெரியாது அப்பாவால்த்தான் திறக்க முடியும் எனக் கூறினேன். அப்பாவைத் திறக்கும்படி பயமுறுத்தினர். அப்பா அதனைத் திறக்க முயற்சித்தார். முடியாது போகவே கத்தியுடன் நின்றவர் சூட்கேசைக் கத்தியால் கிழித்தார். சூட்கேசுக்குள் இருந்த பொருட்களையெல்லாம் வெளியே எடுத்து எறிந்தனர். அவர்கள் தேடிய பணமோ நகையோ அச்சூட்கேசில் இருக்கவில்லை. பின்னர் அறையில் இருந்த மற்றெரு சூட்கேசைப்பத்து எண்ணுவதற்கு முன் திறக்கும்படி கூறினர். திறக்காவிட்டால் அதனையும் கிழித்து விடப்போவதாக மிரட்டினர். நான் அதனைத் திறந்து விட்டேன்.

### வெளிநாட்டு நோட்டுக்களை எடுத்தனர்

சூட்கேசிற்குள் இருந்த வெளிநாட்டு நோட்டுக்களை எடுத்துக்கொண்டனர். லக்ஸ்பிறே தகரம் ஒன்றிற்குள் வைத்திருந்த காப்புகளை எடுத்துக்கொண்டு வநத எனது தந்தை அதையும் அவர்களிடம் கொடுத்தார். பின்பு அறை முழுவதும் தேடினர்கள். ஒன்றும் அகப்படவில்லை ஒருவர் எனது கழுத்திற்குநேரே கத்தி நீட்டியபடி தாலிக்கொடி எங்கே என்று கேட்டார். எங்களுக்குத் தெரியாது. அது இருக்குமிடம் அம்மாவுக்குத் தான் தெரியும் எனக் கூறினேன். அப்போது வெளியில் அம்மாவின் முனகல்ச் சத்தம் கேட்டது. கிறீஸ்கத்தியுடன் என்னைமிரட்டிக்கொண்டு நின்றவர் என்னைப்பார்த்து 'நாங்கள் ஏழுபேர் வந்திருப்பதாகவும், மற்றவர்கள் வெளியில் துவக்குடன் நிற்பதாகவும் சத்தம் போடாமல் தாலிக்கொடியைத் தந்துவிடும்படியும் தவறினல் எங்களைச் சுட்டுக் கொலை செய்யப்போவதாகவும் மிரட்டினர். இன்னும் இரண்டு மணித்தியாலயத்தில் திரும்பிவருவதாகவும் வரும்போது தாலிக்கொடியை ஆயத்தமாக வைத்திருக்க வேண்டுமெனக் கூறிவிட்டு அறையைப் பூட்டிக்கொண்டு வெளியே சென்றனர்.

அறைக்குள் இருந்த சம்மட்டியை எடுத்து அதனல் கதவை உடைத்து வெளியே வர முயன்றபோது தந்தை அப்படிச் செய்யவேண்டாம் எனத்தடுத்தார். சுமார் முக்கால்மணி நேரத்தின் பின் கதவை உடைத்துக்கொண்டு நாங்கள் வெளியே வந்தோம் அப்போது அம்மா வாயில் துணி அடைக்கப்பட்ட நிலையில் வெட்டுக்காயத்துடன் திண்ணையில் கிடந்தார். அம்மாவைத் தூக்கிப்பார்த்தபோது அவர் இறந்து கிடக்கக் காணப்பட்டார் எனத் தெரிவித்தார்.

குறுக்கு விசாரணைக்காக வழக்கு இம்மாதம் 25-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது (ஓ)

## சபையில் ஒலித்தவை

யோகேஸ்: ஜனாதிபதியிடமிருந்து பெற்ற கடிதம் ஒன்றுடன் ஓர் இளம்பெண் எனனிடம் வேலைபெற்றுத் தரும்படி வந்தார். ஜனாதிபதி வழக்கமான முறையில் எம். பியிடம் செல்லும்படிதான் எழுதுவார். ஆனல் வேலைவழங்குவதெல்லாம் ஐ. தே. க. அமைப்பாளர்கள் கைகளில்தான். நிபந்தனைகள் — பேரங்களை நேரிலேயே பேசி, இரவோ பகலோ வேலைதர அவர்கள் தயாராகவிருக்கிருர்கள்; நீங்கள் அவர்களிடம் சொல்லுங்களேன் என்று அப்பெண்ணை வெகுகஷ்டப்பட்டு அனுப்பியபின்; எங்களிடம் செல்லும்படி ஏன் கடிதங்களை அனுப்புகிறீர்கள்; உங்கள் அமைப்பாளர்களிடமே செல்லும்படி அனுப்புங்கள் என்று நான் ஜனதிபதிக்கு எழுதினேன்.

பிரதி நெடுஞ்சாலைகள் அமைச்சர்—ஜி. பிரேமச்சந்திர: நீங்களே அப்பெண்ணைக் கவனிக்கலாமே!

யோகேஸ்: என்னல் முடிந்தால் கவனிப்பேன்; ஆனல், பிரதி அமைச்சர் கவனிக்கும் விதத்தில் அல்ல! (சிரிப்பு).

0 0 0

யோகேஸ்: அரசியலமைப்பில் தமிழ் மக்களுக்கு அனைத்து உரிமைகளும் வழங்கப்பட்டிருப்பதாக உள்நாட்டமைச்சர் கூறினர் ஆனல் எனக்கு இன்னமும் சிங்களத்தில்தான் தினசரி கடிதங்கள் வருகின்றன.

ஓர்உறுப்பினர்: காதல் கடிதங்கள் என்ன மொழியில்?

யோகேஸ்; அவை தமிழில்தான் வருகின்றன!

எம் எச். முகம்மது: அதிகார பரவாக்கல் ஜனநாயக அமைப்புக்கு அவசியம் என்பதால் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை நாம் கொண்டுவர எண்ணினேம்.

முகம்மது: சடுவல உறுப்பினர் (எம். டி. எச். ஜயவர்த்தன) பட்ஜட்டை சிறந்த முறையில் விமர்சித்தார். இதே விதத்தில் அவர் கடந்தமுறையும் பேசியிருந்தால் அமைச்சர் பதவியை இழந்திருக்க நேர்ந்திராது.

முகம்மது: பணவீக்கம் உலகம் முழுவதும் உள்ள பிரச்சினை. பலநாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

முகம்மது: இந்த அரசாங்கம் வர்த்தகர்களுக்குப் பெருமளவு சலுகைகளைச் செய்துள்ளது.

முகம்மது: புகைபிடிக்கும் ஒருவர் நாளொன்றுக்கு இரு சிகரட்டைக் குறைத்தால்; ஒரு 'பெக்' சாராயத்தைக் குறைத்தால் அது நாட்டுக்குப் பாதுகாப்பாகும், ஆனல் இதை நிதியமைச்சர் வரவேற்பாரோ தெரியாது!

முகம்மது: பாடசாலைப் பிள்ளைகள் கட்டண அதிகரிப்பு இன்றியே 5 தினங்களுக்குப்பதில் இனி வாரத்தில் 7 தினமுமே பயணம் செய்யமுடியும்.

சூசைதாசன: மக்கள் அமைச்சருக்குச் சிலைவைப்பார்கள்!

முகம்மது: எனது மதம் அதை அனுமதிக்காது, மாநகர சபை உறுப்பினராகவிருந்த எனது தந்தையாரின் பெயரில் வீதியொன்றுக்குப் பெயரிடச் சிலர் விரும்பியபோது அவர் மறுத்தார். பொதுமக்களின் சொத்துக்களுக்குத் தனிப்பட்டவர்களின் பெயரைச் சூட்டக்கூடாது.

0 0 0

இராஜலிங்கம்: தனியார் பஸ்சேவையை ஊக்குவிப்பது பற்றி அமைச்சர் பேசினர். ஆனல் வடபகுதியில் தனியார் சேவையை நடத்துபவர்களுக்கு பொலிசாராலும், போக்குவரத்துச்சபை உயர் அதிகாரிகளாலும் அசௌகரியங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

0 0 0


கணேசலிங்கம்: உங்களின் கொழும்பு வைத்தியசாலைகள் அமைச்சர்தான் இவற்றைச் சமர்ப்பிக்கும்படி யாழ்ப்பாணம் உறுப்பினரின் பேச்சில் குறுக்கிட்டுக் கூறினர்.

காமினி: குறுக்கீடுகள் இச்சபையில் அதிக கவனத்திற்குக் கொள்ளப்படுவதில்லை.

கணேசலிங்கம்: அப்படியெனில் உங்கள் பேச்சையும் நான் அப்படியே கொள்கிறேன். (8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். வருகைதரும் அருட்சகோதரர்

அருட் சகோதரர் தொபிதாஸ் அவர்கள் மாத்தளை புனித பிரான்சிஸ்கன் துறவறச்சபையில் பயின்று சண்டி ஆயர் வண போல் டெரேரா ஆண்டகையால் திருநிலைப்படுத்தப்பட்டு இன்று மாலை யாழ். வருகையினை முன்னிட்டு அவரது இறைபணிசேவையின் வளர்ச்சிக்காக யாழ்.ஆனைக்கோவிலில் குருக்கள் கன்னியாஸ்திரிகள் இறைபணி சபையினர் ஆகியோர் நன்றித்திருப்பலியினை ஒப்புக்கொடுத்து வரவேற்பு வைபவம் ஒன்றை நடாத்தவுள்ளனர்.



அருட் சகோதரரின் வருகையின் போது மாத்தளை புனித பிரான்சிஸ்கன் சபையின் அதி சிரேஷ்ட சகோதரரும் ஏனைய சகோதரர்களும் வருகைதந்து அச்சபையின் பணிபற்றி யாழ் இளைஞர்களுடன் இன்று முதல் 24-ம் திகதிவரை ஆயர் இல்லத்தில் கலந்துரையாடவுள்ளனர். இச்சபையில் பயின்று யாழ். வருகைதரும் அருட் சகோதரர் தொபிதாஸ் அவர்கள் யாழ். சென் சாள்ஸ் மகா வித்தியாலயத்தினதும் மாத்தளை இந்து மகாவித்தியாலயத்தினதும் பழைய மாணவராவார். இவர் தனது ஞானப்பணியினை புனித ஞானப்பிரகாசியார் பீடப்பணியாளர் சபையிலும் புனித யூதாததேயூ ஆலய பாடல் குழுவிலும் தொடர்ந்து புனித பிரான்சிஸ்கன் துறவற சபையிலும் பணியாற்றிவருகின்றார்.

இவர் புனிதயூதாததேயு ஆலயஸ்தாபகரில் ஒருவரான செபஸ்தியாம்பிள்ளை லேசலின் தம்பதிகளின் புதல்வருமாவார். (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமையாணன் கொலை வழக்கு:

# "சிங்கனை முடித்துவிட்டேன்" எனக் கூறியபடி கத்தியுடன் சென்றனர்"

## ஸ்தலவிசாரணையில் சாட்சியம்

(புலோலி நிருபர் திருச்செல்வம்)

"ஸ்ரீஸ்கந்தராசா கையில் இரத்தக்கறை படிந்தகத்தியுடன் "சிங்கனை முடித்துவிட்டேன்' என்று கூறிக்கொண்டு செல்ல, நான் போய்ப்பார்த்தபோது எனது சின்னண்ணு இரத்த வெள்ளத்தில் வெட்டுக்காயங்களுடன் ஆபத்தான நிலையில் கிடக்கக் கண்டேன். அண்ணு, நான் சாகப்போகிறேன் கொஞ்சம் தண்ணீர் தா என்று எனைக் கேட்டார்.

இவ்வாறு உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த சின்னத்துரை சிங்கராசா (வயது 27) என்பவர் கத்தியால் வெட்டப்பட்டு மரணமான சம்பவம் தொடர்பாக நடைபெற்ற விசாரணையில் சாட்சியமளித்த இறந்தவரின் சகோதரரான சின்னத்துரை இரவீந்திரன் (வயது 21 சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் ஸ்தல விசாரணையை மேற்கொண்டார். வல்வெட்டித்துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். தொடர்ந்து சாட்சியமளித்த இறந்தவரின் சகோதரர் இரவீந்திரன் குறிப்பிட்டதாவது:

"இம் மாதம் 6-ந் திகதி இரவு எட்டேமுக்கால் மணிபோல் நான் துவாளி வீதியால் சாமான் வாங்க வந்தேன். அப்போது எனக்குப் பின்பக்கமாக ஒரு சத்தம்கேட்டது. நான் உடனே திரும்பிப் பார்த்தேன். அப்போது எனது பெரியண்ணு கனகராசாவுடன் ஸ்ரீ என்று சொல்லப்படுகிற ஸ்ரீஸ்கந்தராசா (உடுப்பிட்டி) பிரச்சினைப்பட்டுக்கொண்டிருந்தார். நான் அவர்களுக்குக் கிட்டவந்தபோது ஸ்ரீஸ்கந்தராசா எனது பெரியண்ணுவுக்குக் கத்தியால் கழுத்தில் வெட்டினர். உடனே அண்ணு சாய்ந்து விழுந்தபோது நான் அவரைப் பார்த்து திகைத்த நிலையிலிருந்தேன். இந்தநேரத்தில் ஸ்ரீஸ்கந்தராசாவுடன் சார்த்தகேசு சித்திரவேலு என்பவரும் கூடநின்றுர் அப்போது எனது சின்னண்ணு சிங்கராசாவும் அவ்விடத்திற்கு வந்தார். அவ்விடத்திற்கு வந்த சின்னண்ணு ஸ்ரீஸ்கந்தராசா என்பவரிடமிருந்த கத்தியைப் பறிக்க முயன்றுர். அப்போது ஸ்ரீஸ்கந்தராசா எனது சின்னண்ணுவைநோக்கி கத்தியை ஓங்கினர், உடனே சின்னண்ணு பயத்தின் காரணமாகச் சிதம்பரப்பிள்ளையின் வீட்டிற்குப் போகின்ற ஒழுங்கையை நோக்கி ஓடிப் போனர் எனது அண்ணு ஓடிக்கொண்டிருக்கும்போது ஸ்ரீஸ்கந்தராசா கத்தியுடன அவரைத் துரத்திக்கொண்டு போனர்.

நான் ஸ்ரீஸ்கந்தராசாவைத் தொடர்ந்து சிறு இடைவெளியில் ஓடினேன். அப்போது எனது சின்னண்ணுவும் சந்தேக நபரான ஸ்ரீஸ்கந்தராசாவும் சிதம்பரப்பிள்ளையின் வளவுக்குள் வந்தவுடன் நான்பயத்திஞல் சிதம்பரப்பிள்ளையின் வளவின்முன் வேலியுடன் மறைந்து நின்றேன்.

அப்போது 3, 4 நிமிடங்கள் கழித்து ஸ்ரீஸ்கந்தராசா சிதம்பரப்பிள்ளையின் பின்புறப் பக்கத்திலிருந்து கத்தியுடன்வந்து 'சிங்கனை முடித்துவிட்டேன்' என்று சொல்லிக்கொண்டு ஒழுங்கையில் இறங்கி உடுப்பிட்டி பிரதான வீதியை நோக்கி நடந்து சென்றுர். அந்நேரத்தில், அதாவது சிங்கனை முடித்துவிட்டேன் என்று சொல்லிக்கொண்டு போனபோது அவரது கையில் இரத்தக்கறை படிந்த கத்தி இருந்தபடியால் அவர் அண்ணுவைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்துவிட்டாரென நினைத்தேன். அவர் அப்படிச் சென்றவுடன் நான் சிதம்பரப்பிள்ளையின் வீட்டிற்கு வந்தபோது திருமதி சிதம்பரப்பிள்ளை முற்றத்தில் நின்று சிங்கனை வெட்டிவிட்டான் என்று கூறினர்.

நான் ஸ்ரீஸ்கந்தராசாவும் சின்னண்ணுவு வீட்டின் பின்பக்கம் போனதைக் கண்டபடியால் நான் உடனே வீட்டின் பின்பக்கம் போய்ப்பார்த்தபோது எனது சின்னண்ணன் இரத்தவெள்ளத்தில் வெட்டுக் காயங்களுடன் ஆபத்தான நிலையில் கிடந்தார்? நான் உடனே அண்ணுவை எனது மடியில் தூக்கி வைத்துக் கொண்டு அண்ணு - என்று குழறினேன். அப்போது அண்ணு நான்சாகப் போகிறேன எனக்குக் கொஞ்சம் தண்ணீர் தா என்று கேட்டார்

நான் அண்ணுவை எனது மடியில் வைத்திருந்தபடியால் என்னல் எழும்ப முடியாமல் போய்விட்டது அந்த நேரம் உடுப்பிட்டியைச் சேர்ந்த சின்னத்துரை என்பவரும் எனது மைத்துனர் தயாநிதி என்பவரும் எங்களுக்கிட்டவந்தார்கள். நான் அங்குவந்த சின்னத்துரையிடம் சின்னண்ணு தண்ணீர் கேட்கிருர் தண்ணீர் கொஞ்சம் கொண்டுவந்து தாருங்கள் என்றுசொன்னேன்.

சின்னத்துரை தண்ணீர் கொண்டுவந்து என்னகயில் தரும் சமயத்தில் எனது சின்னண்ணு மயங்கிவிட்டார். நான் முதல் அண்ணுவிடம் வந்தபோது என்ன அண்ணு என்றுகேட்கக் கூடிய நிலையில நான் இருக்கவில்லை. அண்ணுவும் எனக்கு என்ன நடந்ததெனக் கூறவில்லை.

சிறிதுநேரத்தில் நான் அண்ணுவின் கன்னத்தில் தட்டிப் பார்த்தேன். அத்துடன் அண்ணு அண்ணு என்றும் கூப்பிட்டேன். அதே நேரத்தில் எனது மைத்துனர் தயாநிதி வந்து "கார்வந்துவிட்டது, தூக்குவம் ரவீந்திரன் என்று சொன்னர். அதன்பின்னர் நானும் அவரும் சின்னண்ணுவைத்தூக்கி காரில் ஏற்றினேம். அப்போது முதல வெட்டுவாங்கிய எனது மூத்த அண்ணு கனகராசாவைக் காரில் ஏற்றிவைத்திருந்தனர்.

நானும் சின்னண்ணுவை அவருடன் அதேகாரில் ஏற்றி எனது மடியில் காரின் முன் சீற்றில் வைத்துக் கொண்டிருந்தேன் அவர்களை பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லும்போது இடையில் எனக்கு மயக்கநிலை ஏற்பட்டது அதன் பின்னர் நான் பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் இருந்தது தெரிந்தது

எனது மூத்த அண்ணுவான கனகராசா, ஸ்ரீஸ்கந்தராசாவால் வெட்டுவாங்கி விழுந்தபோது நான அண்ணு அண்ணு என்று சொல்லி அணைத்தபோது அண்ணு தன்னை ஸ்ரீஸ்கந்தராசாவும், சித்திரவேலுவும்தான் வெட்டியதாகவும் தான் சாகப்போவதாகவும் சொன்னர்.

நீதவான் மேல் விசாரணையை ஒத்திவைத்து, சந்தேக நபர்களை உடன் கைது செய்யுமாறு வல்வெட்டித்துறைப் பொலிசாருக்கு உத்தரவிட்டார். (ச)

### நிர்வாகிகள்

சித்தன்கேணி)

சங்கானை மேற்கு சனசமூக நிலையத்தின் 32 வது வருடாந்தப்பொதுக்கூட்டம் நிலைய முன்றலில் க. நிர்மலானந்தன் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவன் க. நிர்மலானந்தன், உப தலைவர் ம. விக்னேஸ்வரன், செயலாளர்: ஆ. கிருபாகரன், பத்திராதிபர் சி. சிவகுமார், பொருளாளர் மா. துரைசிங்கம், நிலையப்பொறுப்பாளர் சோ. சுந்தராசன, பரிசோதகர் கே. சொக்கலிங்கம்

# மந்திகை ஆஸ்பத்திரி தரம் குறைப்பு

## உ. ஆ. மன்றத் தலைவர்கள் ஆட்சேபம்

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையைத் தரங் குறைக்க வேண்டாமென்று வடமராட்சிப்பகுதி உள்ளுராட்சி மன்றங்களின் தலைவர்கள் சுகாதார அமைச்சரைத் தந்தி மூலம் கேட்டுள்ளனர்.

அவ் அரசினர் வைத்தியசாலையைத் தரங்குறைப்பது பற்றி தெரிய வந்ததைத் தொடர்ந்து முன்னுள் உடுப்பிட்டி எம். பி, திரு. கே. ஜெயக்கொடி தலைமையில் உள்ளுராட்சி மன்றத்தலைவர்கள் பருத்தித்துறை நீதிமன்ற நூலக மண்டபத்தில் கூடி ஆராய்ந்தனர்.

வல்வெட்டித்துறை நகர சபை தலைவர் திரு. ஞானமூர்த்தி பருத்தித்துறை நகர சபைத்தலைவர் திரு. எம். வேலும்மயிலும் உடுப்பிட்டி முன்னுள் கிராமசபைத்தலைவர் திரு. ஆர். தர்மரத்தினம் முன்னுள் பட்டினசபைத் தலைவர் திரு. தேவசகாயம் கட்டைவேலி முன்னுள் கிராமசபைத்தலைவர் திரு பாலசிங்கம் உட்பட இன்னும் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டு சுகாதார அமைச்சர் திரு காமினிஜெயசூரியாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை (மந்திகை) அரசினர் வைத்தியசாலையை எக்காரணம் கொண்டும் தரங்குறைக்க வேண்டாம்.

இவ்வைத்தியசாலைக்கு வேண்டிய வைத்திய உபகரணங்களை உடன் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவரை உடனடியாக இவ் வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

தற்போது இங்கு கடமையாற்றும் டாக்டர்கள் எவரையும் இடமாற்றம் செய்ய வேண்டாம்.

இச்சம்பவம் தொடர்பாக உள்ளுராட்சி மன்றத்தலைவர்கள் எதிர்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் பருத்தித்துறை எம். பி. திரு கே. துரைரத்தினம் உடுப்பிட்டி எம் பி. திரு. ரீ. இராசலிங்கம் ஆகியோருக்கும் அறிவித்துள்ளனர். (ச)

# ஐ. தே. க. கிளைகள் எதிர்ப்பு

(நெல்லிபடி)

மந்திகை அரசினர் வைத்திய சாலையின் தரத்தைக் குறைப்பதையும் சிலபிரிவுகளை மூடி வேறிடங்களுக்கு மாற்றுவதையும் அதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் பருத்தித்துறை உடுப்பிட்டி ஐக்கிய தேசியக்கட்சி கிளையினர் கூட்டாக ஆட்சேபம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் திரு வி, சந்திரசேகரம் தலைமையில் நடந்த இக்கிளையின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஆட்சேப தீர்மானங்களை சுகாதார அமைச்சர் யாழ் மாவட்ட அமைச்சர் சுகாதர சேவையத்தியட்சகர் ஆகியோருக்கு அனுப்பி வைப்பதெனமுடிவு செய்யப்பட்டது.

இவ்வரசினர் வைத்திய சாலையில் 12 வைத்திய அதிகாரிகள் முன்பு பணிபுரிந்தனர் தற்போது 4 அதிகாரிகளே பணியாற்றுகின்றபடியால் உடனடியாக வைத்திய அதிகாரிகளை அனுப்பி வைக்க வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. (ச)

# ச. ச. நிலையம் திறப்பதில் நிர்வாகத்தினர் இழுபறி!

(பச்சிலைப்பள்ளி)

பருத்தித்துறை கிழக்கில் உள்ள உடுத்துறையில புனருத்தாரணம் செய்யப்பட்டிருக்கும் சனசமூக நிலையம் ஒன்றினை யாழ் மாவட்ட அமைச்சர் திறப்பதா? தொகுதி எம். பி. திறப்பதா? என்ற இழுபறி நிர்வாகத்தினருக்கு இடையே ஏற்பட்டதிஞல் சனசமூக நிலையம் திறக்கப்படாமலிருக்கிறது.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு பி விஜயக்கோன் இப்பகுதிக்கு ஐ தே. கட்சிக் கிளைகளைத் திறக்கச் சென்றபோது அவரைக் கொண்டே இச்சனசமூகநிலையத்தினைத்திறப்பதற்குநிர்வாகத்தினரில் ஒருபகுதியினர் விருப்பம் தெரிவித்திருந்தனர். இது விஷயம் நிகழ்ச்சிநிரலிலும் இடம் பெற்றது

நிர்வாகத்தினரில் மற்றொரு பகுதியினர் தொகுதி எம் பி திரு க. துரைரத்தினத்தைக் கொண்டு சனசமூக நிலையத்தினைத் திறக்கவேண்டுமென்பதால் முன்பு குறிக்கப்பட்டபடி அந்நிகழ்ச்சி நடைபெறுமல இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது.

இதேபோன்று ஆழியவளை உபதபால் நிலயத்திற்கு இணைக்கப்பட்ட தொலைபேசியினையும் அங்குரார்ப்பணம் செய்து வைப்பது மாவட்ட அமைச்சரா? தொகுதி எம். பியா? என்ற சர்ச்சை ஏற்பட்டதிஞல், இறுதியில் உபதபால் நிலைய அதிபரே தொலைபேசியின அங்குரார்ப்பணம் செய்து வைத்து வேலையின ஆரம்பித்தார் எனத் தெரிகிறது. (ச)

# ஆசிரியர்கள் சேவை மனப்பான்மையுடன் சேவையாற்ற வேண்டும்

(அரியாலை)

ஆசிரியர்கள் உயர்ந்த இலட்சியமும், சிறந்த சேவைமனப்பான்மையும் கொண்டவர்களாக இருக்கவேண்டும். தம்மிடம் கல்விகற்கும் மாணவர்களை இந்தநாட்டின் எதிர்காலத் தலைவர்கள் என்ற குறிக்கோளுடன் அவர்களுக்குக் கல்வி புகட்டவேண்டும். ஆசிரியர்கள், அதிபர் - ஆகியோரின் ஒத்துழைப்பின் மூலமே கல்லூரிகளைத் திறம்படச்செயலாற்ற முடியும். பெரிய கட்டடங்களைக்கொண்டவை கல்லூரிகளாகா. சிறந்த மாணவர்களை உற்பத்திசெய்து நாட்டுக்கு வழங்கும்ஸ்தாபனங்களே சிறந்த கல்விக்கூடங்களாகும்.'

இவ்வாறு யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி உவில்லியம் மண்டபத்தில் கல்லூரி ஆசிரியர் சங்கத்திஞல் நடாத்தப்பட்ட பிரியாவிடை இரவு விருந்தில் இளைப்பாறிய ஆசிரியர் திரு. வே. சிவசுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டார்.

கலலூரியில் பணியாற்றிய இளைப்பாறிய ஆசிரியர்களான திருவாளர்கள் வே. சிவசுப்பிரமணியம், எஸ். அருமைநாயகம் ஆகியோர்களுக்கென நடாத்தப்பட்ட பிரிவுபசார இரவு விருந்துக்கு ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை தலைமை வகித்தார்.

திரு, வே. சிவசுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: அரசாங்க பாடசாலைகளில் அப்படியாகத் தொடர்ந்து முப்பது வருடங்கள் சேவையாற்றும் சந்தர்ப்பம் ஆசிரியர்களுக்குக் கிடைப்பதில்லை. பரியோவான் கல்லூரி தனித்தியங்கும் கல்லூரியாக அமைந்ததிஞல் நாம் தொடர்ந்து எமது சேவையை இக்கல்லூரிக்கு வழங்க முடிந்தது என்றுர்.

கல்லூரி அதிபர் திரு. சீ. ஈ. ஆனந்தராசா ஆசிரியர்களின் சேவை நலத்தைப் பாராட்டிப் பேசுகையில் கூறியதாவது: இளைப்பாறும் இவ்விரு ஆசிரியர்களும் தமது கடமையைக் கண்ணுங்கருத்துமாகச் செய்திருக்கிருர்கள். மாணவர்களின் முன்னேற்றத்தை மனத்திற்கொண்டு இவர்கள் தொடர்ச்சியாக இக்கல்லூரியில் ஆற்றிய சேவை மகத்தானதாகும் என்றுர்.

ஆசிரியர் திரு. எஸ். எஸ் மனுவேற்பிள்ளை, உப அதிபர திரு. ரி. குணசீலன் ஆகியோர் ஆசிரியர்களின் சேவை நலனைப் பாராட்டிப் பேசினர்.

### வீரமாமுனிவர் ஆண்டு விழா

நெல்லியடி)

இத்தாலிய கம்பன் எனப் போற்றப்படும் வீரமாமுனிவரின் 300 வது ஆண்டு விழா இம்மாதம 30 ம் திகதி பருத்தித்துறை கலட்டி. றோமன் கத்தோலிக்க பாடசாலையில் கொண்டாடப்படவுள்ளது.

யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது. இவ்விழாவில் பருத்தித்துறை நீதவான் திரு கே எஸ், மகேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வகர்.

### மீனவ மாதிரிக் கிராமங்களை அமைச்சர் பார்வையிட்டார்

(பச்சிலைப்பள்ளி)

யாழ் மாவட்ட அமைச்சர் திரு யு. பி. விஜயக்கோன் பருத்தித்துறை தேர்தல்தொகுதியிலுள்ள ஆழியவளை உடுத்துறை, ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுவரும் மீனவ மாதிரிக் கிராமங்களை அமைச்சர் பார்வையிட்டார்.

ஆழியவளை மீனவ மாதிரிக் கிராமத்தில் இருப்து வீடுகளும் உடுத்துறை மீனவ மாதிரிக் கிராமத்தில் இருபது வீடுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வீடுகள் ஒவ்வொன்றும் சுமார் 14 500 ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் தலா இருபது வீடுகளை அமைக்கத்தான் நடவடிக்கை எடுப்பதாக அப்பகுதி மக்களிடம் மாவட்ட அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
**பாலும் பழமும்**

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15 & 9-30
**Black Sunday**

**ராணி** - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
**சட்டம் என் கையில்**
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க குறிப்பிட்ட சில தினங்கள் நீடிக்கப்பட்டுள்ளது.

வெற்றி முழக்கமிடும் 8-வது வாரம்
**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
பி எஸ் வீரப்பா-நம்பியார் நடித்த
**மீனவ நண்பன்**

**வின்ஸர்** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, & 9-30
ரவிச்சந்திரன்-எல். விஜயலக்ஷ்மி-மனோகர் நடித்த
**எதிரிகள் ஜாக்கிரதை**
பயங்கர சண்டைகள் நிறைந்த படம்
(புதிய பிரதி)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
கடைசி வாரம் தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-ஜெய்சித்திரா
அசோகன்
**வண்டிக்காரன் மகன்**
(ஈஸ்மன் கலர்)
கதை, வசனம்—கருணாநிதி

**SANTHI** Jaffna - 10-30, 2-30, 4-45, 7-0 9-30
★ SIDNEY POITIER
★ MICHAEL CAINE in
**"The Wilby Conspiracy"**
Action - Suspense - Thriller - Color
Await! "THE DIRTY DOZEN"


பாடசாலைகள்

# கால்இறுதி உதைபந்தாட்டப் போட்டிகள்இன்று ஆரம்பம்

-- யாழ். விளையாட்டு நிருபர் இ. ராஜேந்திரராஜா --

யாழ். பாடசாலைகள் விளையாட்டுச்சங்க ஆதரவில் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்று போட்டியின் கால் இறுதி ஆட்டங்கள் இன்றும் நாளையும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் நடைபெறுகின்றன.

மானிப்பாயில் சனிக்கிழமை காரைநகர் இந்து—மானிப்பாய் மெமோறியல் (3-ம் பிரிவு) யாழ். இந்து—காங்கேசன்துறை நடேஸ்வரா (1-ம் பிரிவு தெல்லிப்பழை யூனியன்—யாழ். ஒஸ்மானியா (1-ம் பிரிவு)

சுழிபுரத்தில் சனிக்கிழமை உரும்பராய் இந்து — ஸ்கந்தா (2-ம்பிரிவு) இளவாலை ம. ம. வி — காங்கேசன்துறை ம. ம வி. (3-ம் பிரிவு)

மானிப்பாயில ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்து—யூனியன் (3;ம் பிரிவு) கொக்குவில் இந்து — ஸ்கந்தா (2-ம் பிரிவு)

சுழிபுரத்தில் ஞாயிறு உரும்பராய் இந்து—ஸ்கந்தா (3-ம் பிரிவு) மனிப்பாய் இந்து—சாவகச்சேரி இந்து (3-ம், 2-ம் பிரிவுகள்) (இ)

## 3பிரிவுகளுக்கு ஒரே ஒரு உதவி அரச அதிபர்

(வேலணை)

ஊர்காவற்றுறைத் தொகுதியில் உள்ள மூன்று உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திலும் ஒரேஒரு உதவி அரசாங்க அதிபரே கடமையாற்றிவருகின்றார்.

நெடுந்தீவு அரசாங்க அதிபர் இடமாற்றம் பெற்றுள்ளதாலும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அபர் பயிற்சிக்காக சென்றுள்ளதாலும் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ குணநாயகமே தமது பிரிவுடன் மேற்படி இருபிரிவுகளிலும் கடமையாற்றிவருகிறார். (இ)

## "விளையாட்டு வீரர்களுக்கு கல்வி இன்றியமையாதது"

(உடுப்பிட்டி)

'வெளிநாடுகளில் உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களுக்கும் விளையாட்டு வீரர்களுக்கும் பெரும் மதிப்பும் கௌரவமும் கொடுக்கப்படுகின்றது. அங்கே விளையாட்டுக் கோஷ்டிகளை பணம்கொடுத்து விலைக்கு வாங்கி விளையாட்டுப் போட்டிகளை நடத்தக்கூடியவர்களும் இருக்கின்றார்கள்.'

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. கே. குணரத்தினம் நெல்லியடி என். சீ .சீ. விளையாட்டுக் கழகத்தின் மூன்றுவது உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிப பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

நெல்லியடி முருகமூர்த்தி ஆலயமுன்றலில் நடைபெற்ற இப்பரிசளிப்புவிழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

'விளையாட்டுவீரர்கள் நல்ல பண்பாளர்களாகவும் அறிவாளர்களாகவும் திகழவேண்டும். எமது நாட்டில் சிறந்த விளையாட்டு வீரர்கள் தவறான வழிகளில் சென்று தம்மைத்தாமே கெடுத்துக்கொள்கின்றார் கள். இது கவலைக்குரியதாகும்' என்றார்.

விளையாட்டு வீரர்களுக்கு கல்வி இன்றியமையாதது. பல விளையாட்டுவீரர்கள் கல்வியை விட்டுவிட்டு வீட்டிலேயே தம்மை ஈடுபடுத்திவருகின்றனர். இதனாலேயே மேலைநாடுகளைப்போலன்றி எமது நாட்டில் விளையாட்டு வீரர்களுக்கு உரிய மதிப்புக்கொடுக்கப்படுவதில்லை.

இக்கூட்டத்தில் திரு. என். பாஸ்கரன், திரு. சோதிரவி ஆகியோரும் பேசினர். விழா முடிவில் பட்டிமன்றமும்இடம் பெற்றது. (அ)


**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி-ஞாயிறு 2-45
**ஞானக்குழந்தை**

2-வது வாரம்
**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
**அந்தமான் காதலி**
(கலர்-புதிய பிரதி)

**ஹரன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
Burt Reynold
Sully Field in
SMOKEY AND THE BANDIT.
action comedy-color


## தம்பசிட்டி பாலர்களின் விளையாட்டுப் போட்டி

(புலோலி)

இலங்கைக் கிராமிய மீளமைப்பு நிறுவனத்தின் ஆதரவில் இயங்கும் தம்பசிட்டி பாலர் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி சிறப்பாக நடைபெற்றது.

இவ் விளையாட்டுப்போட்டியின் 5 வயது ஆண்கள் 'ஏ'பிரிவுக்குரிய விளையாட்டுக்கள்ஐந்திலும் முதலாம் இடத்தைப பெற்ற செல்வன் கே.எம். சுதாசன் சிறந்த வீரனுக்கான வெற்றிக்கிண்ணத்தையும், அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற வீரனுக்கான வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றுக்கொண்டார்

இவ் விளையாட்டுப் போட்டியில விளையாட்டு வீரர்களுக்கான பரிசில்களை திருமதி. சரஸ்வதி பொன்னம்பலம் வழங்கினார். (சு)

பரு. ப. நோ. கூ. ச.

## இயக்குநர் சபை

(புலோலி)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபைத்தெரிவில் தமிழர் விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்தவர்களே பெரும்பான்மையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வியக்குநர் சபை அங்கத்தவர் தெரிவு பருத்தித்துறை சித்திவிநாயகர் பாடசாலைமண்டபத்தில் நடைபெற்றது,

யாழ். கூட்டுறவு உதவிஆணையாளர் திரு ஏ. மகாதேவா தலைமைக்காரியாலய கூட்டுறவுப்பரிசோதகர்களான திரு. கே. எஸ். முத்தையா, எம். தம்பிராசா ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். அங்கத்தவர்கள் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டனர்.

திரு. வல்லிபுரம் தலைவராகவும், திருவாளர்கள் க. துரைராசா, அம்பலவாணர், வே. முத்துக்குமாரசாமி, ச. சந்திரசாஅ, தர்மகுலசிங்கம், புவந்திரம் ஆகியோர் இயக்குநர் சபை அங்கத்தவர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (சு)

## அபிவிருத்தி வேலைகள் தாமதம்

(துணுக்காய் நிருபர்)

வவனிக்குளம் நீர்ப்பாசன திட்டத்தின் பாரிய அபிவிருத்திக்கு சென்ற ஆண்டு ரூ 20 கோடிபணம் ஒதுக்கப்பட்டது இதில் சுமார் ரூ.8 கோடிபணம் தான் செலவழிக்கப்பட்டு அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டது. மற்றையபாரியகுளங்களுடன் ஒப்பிடுகையில மிகக் குறைந்த விதமே இப் பிரதேச அபிவிருத்திக்கு செலவழிக்கப்பட்டுள்ளது. இதனால் அபிவிருத்திவேலைகளில் தாமதம் ஏற்பட்டு வருகின்ற .

## கலைநகருக்கு மின்விநியோகம்

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டைத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் கலைநகர் கிராமத்துக்கு மின்விநியோகத்திற்கு 397,200 ஐ ஒதுக்கிக் கொடுத்துள்ளார் இக்கிராமத்தின் மின்சார வேலைகளை இலங்கைசபை பொறுப்பேற்றுள்ளது.


**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜனத்திரள் நிறைந்த 2வது வாரம்
காட்சிநேரங்கள் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறோம்
மூன்று மணித்தியாலங்கள் அமெரிக்காவைச் சுற்றி வலம்வருவதற்கு ரசிகர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
மக்கள் கலைஞர் ★ ஜெய்சங்கர் ★ சிமா ★ புன்னகை அரசி கே. ஆர். விஜயா
நாட்டியப் பேரொளி பத்மினி ★ வி. கே. ராமசாமி ★ மனோரமா
விதுபாலா ★ ரீனா ★ அமெரிக்க நடிகர்கள் ஜோ ஆலபரட் ★ மார்ஷல் மற்றும் பலர் ஜொலிக்கும்
**ஒரே வானம் ஒரே பூமி**
(வண்ணக்கலர்)
இந்திய திரைப்பட வரலாற்றில் இதுவரை இடம்பெற்றிராத முதன் முதலாக முழுக்க முழுக்க அமெரிக்காவில் எடுக்கப்பட்ட வண்ணத் திரையோவியம்.
ஆங்கிலப் படங்களை மிஞ்சும்வகையில் அமைந்த விறுவிறுப்பான காட்சிகள் நிறைந்த படம்.
சண்டைப்பட ரசிகர்களுக்கு இனிமையான ... விருந்து
பயங்கரச் சண்டைகள், மோட்டார் சைக்கிள், கார் ஓட்டங்கள் நிறைந்த படம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஊழியர் தேவை!!!
ஸ்ரேசனரி, புத்தக விற்பனை அனுபவம் உள்ளவர்களும், முகாமையாளர்கள், கணக்காளர்கள், வியாபார அனுபவமுள்ள தட்டெழுத்தாளர்களும் பத்திரிகை, சுவீப் டிக்கற் விற்பனை செய்யக்கூடியவர்களும் நற்சான்றிதழ்களுடன் 30-11-80 மாலை 2-5 மணிக்குள் சமூகம் தரவும்.
பூபாலசிங்கம் புத்தகசாலை
8, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

### இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்) 'தமிழரின் எதிர்காலம்' என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்புத்துறை சாமியார் வீதியிலுள்ள இல்லம் ஒன்றில் நடைபெறும். டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் திருவாளர்கள் ஈழவேந்தன், வரதராஜா, குமரன், இறைகுமாரன், கோவை மகேசன் ஆகியோர் உரையாற்றுவர். (இ)

ஊழியர் தேவை!!!
அச்சக அனுபவமுள்ள கட்டர், பைண்டர் ரூளர், நிர்வாகஸ்தர் நற்சான்றிதழ்களுடன் 30-11-80 காலை 9 — 12 மணிக்குள் சமூகம் தரவும்.
யாழ். மாநகர எல்லைக் குட்பட்டவர்கள் விரும்பப்படுவர்
பீ. பி. டி. இன்டஸ்ரீஸ்
212, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

# "தன்னைத்தானே தூய்மைப்படுத்தாத இனம் சுதந்திரத்திற்கு அருகதையற்றது"

## பிரார்த்தனையை முடித்துவைத்து 'அமிர்' உரை

(யாழ்ப்பாணம்) தன்னைத்தானே தூய்மைப் படுத்தாத இனம் எதுவும் சுதந்திரத்திற்கு அருகதையற்றதாகும்.

இவ்வாறு அறவழிப் போராட்டக் குழு நேற்று யாழ். நகரில் நடத்திய பிரார்த்தனையை முடித்து வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினர்.

இக்கூட்டம் திரு. வி. ஜி. தங்கவேலு தலைமையில் நடைபெற்றது. அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

''தமிழினம் தமக்குள் ஒரு பகுதி மக்களை சாதியின் பேரால் அடக்கி ஒடுக்கி வைத்துக் கொண்டு சுதந்திரம் கோருவது அர்த்தமற்றதாகும் சாதி, சீதனம் என்னும் பேய்கள் மக்களின் உள்ளத்தில்தான் குடியிருக்கின்றன. அவற்றினை மக்களின் உள்ளத்திலிருந்து அகற்றுவதற்காக அறவழிப் போராட்டக்குழுவினர் இன்று 12மணித்தியாலங்கள்பிரார்த்தனையிலும், உண்ணாவிரதத்திலும் ஈடுபட்டிருந்தார்கள்.

'தமிழினம் பிறப்பினால் தன்னைப் பிரித்துப் பார்க்கும் நிலை மாறி, நாம் எல்லோரும் தமிழர்கள் எனச் சிந்திக்கும் நிலை ஏற்பட வேண்டும்.

தமிழினத்தில் எத்தனையோ பெண்களின் வாழ்வு மலராததற்குக்காரணமாக இருக்கின்ற சீதனக் கொடுமைக்கு எதிராகவும் அறவழிப் போராட்டக் குழுவினர் சாத்வீக முறையில் நடவடிக்கைகளைமேற்கொள்ள முன்வந்தது பாராட்டுக்குரியதாகும். சீதனம் என்பது உண்மையில் ஓர் ஊழலாகும்.''

சீதனப் பேயின் கொடுபாவியை எதிர்க்கட்சித் தலைவர் திரு.அ. அமிர்தலிங்கமும், சாதிப் பேயின் கொடும்பாவியை யாழ். மாநகர முதல்வர் இராஜா விசுவநாதனும் தீயிட்டுக் கொளுத்திஞர்கள்.

இக்கூட்டத்தில் யாழ். மாநகார முதல்வர் திரு இராசா விசுவநாதன், மாநகர உறுப்பினர் திரு. அலோசியஸ், திரு. மாவை சேனதிராசா ஆகியோரும் பேசினர்கள். (பச்சிலை நிருபர்-இ)

## சபையில் ஒலித்தவை....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

**காமினி:** எனது குறுக்கீடுகளை மாத்திரம்.

**கணேசலிங்கம்:** நான் 1600ரூபா அலவன்ஸ்பெறுகிறேன். எனது பென்ஷன் பணமும் கிடைக்கிறது. மனைவியும் உழைக்கிருர். ஆனாலும் எனது குடும்பத்துக்கு இது போதவில்லை எனின், சாதாரண குடும்பங்களின் நிலை இன்று என்ன?

**கணேசலிங்கம்** இந்த 'பட்ஜட்' விவாதத்தின்போது முன் ஆசனங்களும் பல வெறுமையாகவே காட்சிதருகின்றன. கிராமப்புற மக்களும் ரி. வி பார்க்கும் வாய்ப்பிருந்து அவர்கள் இக் காட்சியைப் பார்த்தால் அடுத்ததேர்தலில் அவர்கள் வாக்களிக்கமாட்டார்கள்.

**கணேசலிங்கம்:** தமிழ்ஈழத்தை மீளமைக்க நாம் வடக்கு கிழக்கில் மக்களாணையைப்பெற்றிருக்கிறோம். ஆனல் இந்த அரசாங்கத்தின் பொருளாதார நடவடிக்கைகள் வடக்கு, கிழக்கு மக்களையும் பாதிப்பதால் இந்த விவாதத்தில் நாமும் கலந்துகொள்கிறோம்.

[கடுவல உறுப்பினர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தன உறுப்பினர் ஒருவருடன் கதைத்துக்கொண்டிருக்கிருர்]

**பிரதி சபாநாயகர்:** ஒழுங்கு; ஒழுங்கு.

**எர். டி. எர்.** மன்னிக்கவேண்டும் பிரதிச் சபாநாயகர் அவர்களே, நீங்கள் என்னை வெளியே அகற்றுமுன் நானே சென்றுவிடுகிறேன்! (சபையிலிருந்து வெளியே செல்கிருர்). (ம)

## அமரத்துவ நன்றி வழங்கலும் அந்தியேட்டி அழைப்பும்

### சின்னையா முத்துக்குமாரு

(பிரபல நகைவியாபாரியும் அடைவு பிடிப்பவரும்)

அவதாரம்: 10-05-1907 அமரத்துவம்: 23-10-1980



யாழ்ப்பாணம் வெள்ளாந்தெரு இல. 10, வைரவ கோவில் வீதியைச் சேர்ந்தவரும் கே. கே. எஸ். வீதி முத்துக்குமாரு அன்சன்முன்னுள் உரிமையாளருமாகிய அமரத்துவமடைந்த எனது கணவர் சின்னையா முத்துக்குமாருவின் இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்துகொண்ட அனைவருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியிருந்தோருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை வழங்கி 22-11-80 சனிக்கிழமை காலை கீரிமலையிலும் நண்பகல் 12 மணிஅளவில்அவரது இல்லத்திலும் நடைபெறவிருக்கும் அன்னரின் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்துகொண்டு அன்னரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேம்.

மனைவி திருமதி மு. நாகம்மா;
பிள்ளைகளும், மருமக்களும்.

10, வைரவ கோவிலடி,
வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

7411

## வடபகுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடு செய்திருந்த இக்கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

திருமதி பண்டாரநாயக்கா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

1975-ம் ஆண்டு பிரதமராக இங்கு வந்த நான் உங்களுக்கு அரும்கொடையாக பல்கலைக்கழகம் ஒன்றைத் தந்தேன்.

இன்று குடியியல் உரிமைகளுடன் எம். பி பதவியையும் பறிக்கப்பட்டுள்ள நிர்க்கதியான நிலையில் உங்கள் முன் வந்துள்ளேன்.

நான் இழந்துள்ள உரிமைகளையும்வடபகுதி விவசாயிகள் உட்பட இந்தநாட்டு விவசாயிகள் இழந்துள்ள உரிமைகளையும் மீண்டும் பெறுவதற்கு நாம் பெரும் போராட்டம் ஒன்றை நடத்த வேண்டும். இதற்கு வடபகுதி மக்களும் ஆதரவு வழங்க வேண்டும்.

எனது ஆட்சிக் காலத்திலு வடபகுதி விவசாயிகள் பெரும் செல்வாக்குடன் வாழ்ந்தார்கள். அந்நிலை இன்று இல்லை

இன்று நீங்கள் அளித்துள்ள இந்த வரவேற்பை திரு. ஜெயவர்த்தன அறிந்தால் நிச்சயம் ஆச்சரியப்படுவார் என்பதில் சந்தேகமில்லை. (கொ-இ)

## கும்பாபிஷேகம்

(சுழிபுரம்) மூளாய் வரதன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான ஸ்ரீ பஞ்சமுகவிநாயகர் பிரதிஷ்டை மஹா கும்பாபிஷேகம் இம்மாதம் 27ம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேக தினத்தன்று பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புரையாற்றுவார்.

விவசாயிகளுக்கு

# உழவுஇயத்திரத்திற்குப் பதில் எருமைகளை வழங்குக

## சூசைதாசன் சபையில் கோரிக்கை

(கொழும்பு) பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படும் குறைநிரப்புப் பிரேரணைகளை இனிமேல் விவாதமின்றி நிறைவேற்ற அனுமதிக்கமாட்டோம்.

இவ்வாறு மன்னர் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

விவசாய அமைச்சுக்கான குறைநிரப்புப் பிரேரணை மீது திரு. சூசைதாசன் பேசினர். வயல்களை உழுவதற்கு உழவு இயந்திரங்களுக்குப் பதிலாக இனிமேல் எருமைகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க அரசு முன்வரவேண்டும். எருமைகள் மூலம் பாலும் கிடைக்கும்; பசளையும் கிடைக்கும் என்றும் திரு. சூசைதாசன் குறிப்பிட்டார். (ம.இ)

### ஓடும் பஸ்ஸில் தாக்குதல்

# வ. போ. ச. உத்தியோகத்தர் படுகாயமடைந்தார்

(மாவிட்டபுரம்) பருத்தித்துறை யாழ்ப்பாணம் இ. போ.ச. பஸ்ஸில் அச்சுவேலியில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் இ. போ. ச. பாதுகாவல் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்தார். அத்துடன் பிரயாணி ஒருவரும் காயமடைந்தார்.

பருத்தித்துறை யாழ்ப்பாணம் இ. போ. ச. பஸ் அச்சுவேலிக்கூடாகச் செல்லும்போது இத்தாக்குதல் இடம் பெற்றுள்ளது

மேற்படி பஸ்ஸில் இருந்த பெண்பிள்ளைகளுடன் பஸ்ஸில் வந்த இ. போ. ச.கோண்டாவில் டிப்போ பாதுகாவல் உத்தியோகத்தர் சேஷ்டை புரிந்ததாகவும் இதனையடுத்து பஸ்ஸில் வந்த பெண்பிள்ளைகளது இனத்தவர் ஒருவர் பேசியபோது தகராறு மூண்டதாவும் கூறப்படுகிறது. இநத நபர் மேற்படி இ. போ. ச. பாதுகாவல் உத்தியோகத்தர் தம்மை ஏசி பஸ்ஸிற்கு வெளியே தள்ளியதாக காங்கேசன் துறைப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

இதே நேரத்தில் மேற்படி இ. போ.ச. உத்தியோகத்தர் சம்பவதினம் தாம் சென்ற பஸ்ஸை மறித்த கோஷ்டி ஒன்று பின்பக்கக் கதவால் ஏறி தம்மைத் தாக்கியதாக தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக காங்கேசன் துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் தியாகராசா விசாரணை செயது வருகிருர். (அ)

## சாயிபாபாவின் பிறந்த தினம்

(யாழ்ப்பாணம்) யாழ். மத்திய பகவான் ஸ்ரீ சத்யசாயிசேவா நிலையத்தினர் பகவான் சத்யசாயி பாபாவின் 55வது பிறந்த தினவிழாவை நாளை மாலை யாழ் ரசிக ரஞ்சன சபாமண்டபத்தில் கொண்டாடுகின்றனர்.

## அமைதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. இராஜா விசுவநாதன், திரு கு. நேசையா, மாவை சேனதிராஜா, அறவழிப் போராட்டக்குழுச் செயலாளர் திரு. க. ஜீவதாஸ், நடவடிக்கைக்குழு உறுப்பினர் திரு. ரி. எஸ். துரைராஜா ஆகியோரும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

மாலை 6 மணியளவில் சாதிப்பேய்-சீதனப்பேய் ஆகியனவற்றின் கொடும்பாவி ஒன்று தந்தை செல்வா நினைவாலயத்திலிருந்து கடற்கரை வரை இழுத்துச்செல்லப்பட்டு எரிக்கப்பட்டது. (கொ-இ)

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் இராசரத்தினம்

ஓய்வுபெற்ற வீடமைப்பு ஆணையாளர் மாணிக்கம் இராசரத்தினம் காலமானர். இவர் பொன்னம்மாவின் அன்பு மகனும், தர்மபுத்திரியின் அன்புக் கணவரும், ஞேகினி, ஞேகன், இராஜன் (இங்கிலாந்து), ரதினி கனடா), ரூபினி (சென்னை கிறிஸ்தவ மகளிர் கல்லூரி) ஆகியோரின் தந்தையும், நவபாலச்சந்திரனின் மாமனரும், சுகன்யாவின் பேரனும் ஆவார். அன்னரின் நல்லடக்க ஆராதனை 24-11-80 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அன்னரது இல்லத்தில் நடைபெறும்.

7413

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் ... 6-ம் இலக்க அச்சகத்தில் நவம்பர் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka ... No. QB 894 /78 ... P. B. No 4 ... Grams Eelanaadu, Phone 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org